வெளியீடு எண் 51

81/1.56

# சீகாழித் தல வரலாறு

PUBLIC LIBRARY APR 58

OFFICE OF THE REGISTR... 9- ... 1956 MADRAS

தருமபுர ஆதீனம்.

1955

[விலை ரூ. 0-5-

வெளியீடு எண் 51

உ
சிவமயம்

# சீகாழித் தல வரலாறு

இது

இவ்வாலய பரம்பரைத் தருமகர்த்தா
திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம்
25 ஆவது மகாசந்நிதானம்
**ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்**
திருவுள்ளத்தின்படி

சீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானத்தில்
வெளியிடப்பெற்றது.

விலை ரு. 0—5—6

1955

| | | | |
|---|---|---|---|
| முதற்பதிப்பு | 1942. | பிரதிகள் | 1000. |
| இரண்டாம் பதிப்பு | 1950. | ,, | |
| மூன்றும் பதிப்பு | 1955. | ,, | |

ஞானசம்பந்தம் அச்சகம்,

தருமபுரம்.



தருமபுர ஆதீனம் 25 ஆவது மகாசந்நிதானம்,

ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணியதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்

உ

சிவமயம்

# முகவுரை

சீகாழித் தலவரலாறு என்னும் இந்நூல் 1942-ல் முதற்பதிப்பாக வெளிவந்துள்ளது. தேவாரப் பதிகங்கள் பெற்ற திருத்தலங்களில் இத்தலத்திற்கே மிகுதியான பதிகங்கள் இருப்பதால் அவைகளனைத்தையும் ஒருசேரத் தொகுத்து கையடக்கப்பதிப்பாக 1946லும் 1948லு மாக இருமுறை அச்சிடப்பெற்றது. ஆயினும் தல வரலாற்று நூல் இப்பொழுது கிடைத்தற்கருமையாய் இருப்பதால் மூன்றும் பதிப்பாக இப்பொழுது இது வெளிவருகின்றது.

சிற்பங்கள், அன்பர்கள், கல்வெட்டாராய்ச்சி முதலிய தலைப்புக்கள் புதிதாகஎழுதிச் சேர்க்கப்பெற்றிருக்கின்றன. தலத்தேவாரப் பதிகங்கள் தனியே அச்சிட்டிருப்பதால் சில பதிகங்கள் மட்டும் பிற்சேர்க்கையாகச் சேர்க்கப் பட்டிருக்கின்றன. தருமபுர ஆதீனம் 10-வது குருமகா சந்நிதானம் ஸ்ரீ-ல-ஸ்ரீ சிவஞானதேசிக சுவாமிகள் அருளிச் செய்த ஆபதுத்தாரணர் மாலையும் பின்னர் இணைக்கப் பட்டுள்ளது.

அன்பர்கள் படித்துப் பயன்பெறுவார்களாக.


வித்துவான்,

சீகாழி தேவஸ்தானம்,
15-12-1955.

மாணிக்கவாசகத்தம்பிரான்,
கட்டளை விசாரணை.

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | தலப்பெயர்கள் | 1 |
| 2. | கோயிலமைப்பு | 3 |
| 3. | மூர்த்திகள் | 4 |
| 4. | தீர்த்தங்கள் | 5 |
| 5. | தலப்பெருமை | 7 |
| 6. | புராணவரலாறு | ,, |
| 7. | வழிபட்டோர் | 11 |
| 8. | அன்பர்கள் | ,, |
| 9. | கல்வெட்டுக்கள் | 17 |
| 10. | நித்தியபூஜைகளும், திருவிழாக்களும் | 29 |
| 11. | சுற்றுக்கோயில்கள் | 30 |
| 12. | மண்டபங்கள் | 31 |
| 13. | சொத்துக்கள் | ,, |
| 14. | திருப்பணி | 32 |
| 15. | சமயப்பணி | 34 |
| 16. | நிர்வாகம் | 35 |
| 17. | பதிகங்களும், நூல்களும் | ,, |
| 18. | திருப்பாடல்கள் | 37 |



திருஞானசம்பந்தசுவாமிகள்.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சீகாழித் தல வரலாறு

## 1. தலப் பெயர்கள்

நீர்வளமிக்க சோழநன்னாட்டில் காவிரியின் வடபால் உள்ள பாடல்பெற்ற தலங்களுள் சீகாழி ஒன்றாகும். இது தஞ்சை ஜில்லா சீகாழி தாலூகாவிற்குத் தலை நகராயுள்ளது. தென்னிந்திய இருப்புப் பாதையில் ஒரு புகைவண்டி நிலையமாகவும் அமைந்துள்ளது.

பிரமர்கள் பலர் தங்கள் படைத்தற்றொழில் இடையூறின்றி முற்றுப்பெற இறைவனை வழிபட்டு வந்ததால் **பிரமபுரம்** எனவும், இறைவன் மூங்கில் வடிவமாகத் தோன்றிச் சூரபன்மனுக்கு அருள்செய்தமையால் **வேணுபுரம்** எனவும், சூரபன்மனுக்குப் பயந்த தேவர்கள் தங்களுக்குப் புகலிடமாகக் கொண்டு பூசித்தமையால் **புகலி** எனவும், அசுரர்களால் தன் வலிகுன்றிய காரணத்தால் சுக்கிரன் பூசித்தமையாலும், இயமதர்மன் குருத்துவம் பெற இறைவன் குருவாகத்தோன்றி அருள் செய்தமையாலும், குருத்தன்மை யிழந்த வியாழன் குருத்துவம் பெறப் பூசித்தமையாலும் **வெங்குரு** எனவும், பிரளய

காலத்தில் எல்லா வுலகமும் அழிந்த பொழுது இத்தலம் ஒன்றே மேன்மைபெற்று விளங்கும் வண்ணம் சிவ பெருமான் உமையம்மையாரோடு சுத்த மாயையைத் தோணியாகக்கொண்டுவந்து தங்கியிருந்ததால் **தோணி புரம்** எனவும், தரையைப் பிளந்து சென்று இரணியாக் கனைக் கொன்ற வராகமூர்த்தி பூசித்ததால் **பூந்தராய்** எனவும், தலைக்கூருகிய இராகு பூசித்தமையால் **சிரபுரம்** எனவும், புருவடிவோடு தன்னைச் சோதிக்கவந்த அக்கினி யால் சிபிச்சக்கரவர்த்தி நற்கதியடைந்தமையால் **புறவம்** எனவும், சண்பைப்புல்லால் மாய்ந்த தங்குலத்தவரால் வந்தபழி தன்னைத் தொடராதிருக்கும்படிக் கண்ணன் பூசித்தமையால் **சண்பை** எனவும், ஸ்ரீமந் நடராஜப் பெருமானோடு வாதாடிய காரணத்தால் தனக்கு ஏற்பட்ட குற்றம் நீங்க ஸ்ரீ பத்திரகாளி இங்குப் பூசித்தமையாலும், தன் வலியை யழித்த கண்ணபிரானல் ஏவப்பட்ட காளிங்கன் என்னும் பாம்பு பூசித்தமையாலும் **ஸ்ரீ காளிபுரம்** (சீகாழி) எனவும், மச்சகந்தியைக் கூடிய கொச்சையாம் பழிச்சொல்நீங்கப் பராசரர் பூசித்தமையால் **கொச்சைவயம்** எனவும், எத்தலங்களிலும் தொலையாத தம்மலத்தொகுதி நீங்குமாறு உரோமசமுனிவர் இறை வனைப் பூசித்தமையால் **கழுமலம்** எனவும் பன்னிரு திருநாமங்கள் * இத் தலத்திற்கு உள்ளன.

இவையன்றிச் சங்கநிதிபுரம், பதுமநிதிபுரம், சிவா சாரியபுரம், பராசரக்ஷேத்திரம், புனர்ஜன்மபுரம், கிரிபுரம், உமாபதிபுரம், சீவன்முத்திபுரம், நீலகண்டவெற்பு,

---

*இவைகள் பன்னிருகத்தும் விளங்கிவந்த பெயர்களாமென்பது "வசையில் காட்சி" என்னும் திருக்கழுமல மும்மணிக்கோவை 10-வது பாடலால் விளங்கும்.

மாலைமாற்றுப்பதி, எழுகூற்றிருக்கைப்பதி, லிங்காடவி, குய்யகாசி, மூலாதாரக்ஷேத்திரம் என்னும் பெயர்களும் உள்ளன.

## 2. கோயிலமைப்பு

திருக்கோயில் நகர்நடுவில் நாற்புறமும் கோபுரங்களுடனே உயர்ந்த சுற்றுமதில்களோடு விளங்குகின்றது. அதனுள் பிரமபுரீசுவரருக்கும், திருநிலை நாயகிக்கும், திருஞானசம்பந்தருக்கும் தனித்தனியே ஆலயங்கள் உள்ளன. இவைகள் கிழக்குப் பார்த்த சந்நிதானங்களே. சுவாமிகோயில் மகாமண்டபத்தில் திருஞானசம்பந்தர் உற்சவமூர்த்தியாக எழுந்தருளியிருக்கின்றார். தெற்கு உட்பிராகாரத்தில் முத்துச்சட்டைநாதரும், அங்குள்ள திருமாளிகைப்பத்தியில் அறுபத்திமூவர் மூலவர்களும் உள்ளனர்; அங்கேயே சட்டைநாதர் பலிபீடமும் இருக்கின்றது. மேலைப்பிராகாரத்திலும் வடக்குப் பிராகாரத்திலும் மேலே மலைக்குப்போகப் படிக்கட்டுகள் அமைந்திருக்கின்றன. சுவாமி கோயிலை ஒட்டி கட்டுமலையில் இருபது புள்ளினம் ஏந்தும் ஐதிகத்தில் ஸ்ரீ உமாமகேசுவரர் (தோணியப்பர்) பெரிய உருவத்துடன் எழுந்தருளி யிருக்கின்றார். இதன் தென்புறத்தில் ஸ்ரீ சட்டைநாதர் எழுந்தருளி யிருக்கின்றார். இவ்விரு மூர்த்தங்களும் சுதையாலானவை.

சட்டைநாதசுவாமி மிகவும் மூர்த்திகரம் மிக்கவர். இவர் திருநாமங்கொண்டே இத்தேவஸ்தானம் விளங்குகிறது. இம்மலை திருத்தோணிமலை எனப் பெயர்பெறும். சுவாமிகோயில் வெளிப் பிராகாரம் வடமேற்கு மூலையில் திருஞானசம்பந்தர் திருக்கோயில் விளங்குகிறது. அதற்கு அணித்தாக ஈசானத்தில் அம்மையின் ஆலயம் உள்ளது.

அம்மை சந்நிதியில் பிரமதீர்த்தம் நாற்புறமும் கருங்கற் படிக்கட்டுகளுடன் விளங்குகிறது. சுவாமி சந்நிதியில் மடைப்பள்ளியும், தேவஸ்தான காரியாலயமும் தனித் தனியே அமைந்திருக்கின்றன.

## 3. மூர்த்திகள்

திருக்கயிலாயத்தைத் தனக்குச் சிறப்பிடமாகக் கொண்டு வீற்றிருக்கின்ற சிவபெருமான் குருமூர்த்த மாக மக்கட்கு உபதேசம் செய்தும், லிங்க மூர்த்தமாகப் பல தலங்களில் கோயில்கொண்டருளியும், சங்கம மூர்த்தமாக அன்பர்க்கு வேண்டுவன அளித்தும் அருள் செய்து வருகின்றார். இம் மூன்று மூர்த்தமாகத் தனித் தனியே பல தலங்களிலும் எழுந்தருளியுள்ள பெருமான் இங்கு மூன்று மூர்த்தங்களும் ஒருங்கே விளங்க எழுந் தருளியுள்ளார்கள்.

குருமூர்த்தம்:- இங்கு மலைமீது பெரியநாயகி சமேத பெரியநாயகராக எழுந்தருளியிருக்கும் தோணியப்பரே குருமூர்த்தம். பிரமதீர்த்தக்கரையில் திருஞானசம்பந்தப் பிள்ளையாருக்கு ஞானோபதேசம்செய்தகுரு இவரேயாவர்.

இலிங்கமூர்த்தம்:-இத்தலத்தில் மூலவராக விளங்கும் பிரமபுரீசரே இலிங்கம். இது பிரமனால் ஸ்தாபிக்கப் பட்டது. இதனைப் பலர் பூசித்துப் பேறுபெற்றிருக் கின்றனர்.

சங்கமமூர்த்தம்:- இம்மூர்த்தம் மலையுச்சியில் சட்டை நாதர் என்னும் திருநாமத்தோடு விளங்கிவருகிறது. இவர் இரணியரது உயிரைமாய்த்த நரசிங்கத்தைப் பிளந்து அதன்

எலும்பைக் கதையாகவும் தோலைச் சட்டையாகவும் கொண்டு இங்குத் தனிச்சிறப்புடன் விளங்கி வருகிறுர்.

துங்கமாமணித் தூணில்வந் திரணியன்
    தோள்வலி தனைவாங்கும்
சிங்கவேற்றுரி யரைக்கசைத் துலகெலாந்
    தேர்ந்தளந் தவன்மேனி
அங்கம்யாவுமோர் கதையதாய்க் கொண்டதள்
    அங்கியாப் புனைகாழிச்
சங்கவார்குழைச் சட்டைநா யகன் துணைத்
    தாமரைச் சரண்போற்றி

இம் மூர்த்தம் சிவமூர்த்தங்களு ளொன்ருன வைரவ மூர்த்தம். தத்துவங்களாகிய பைரவர் எட்டுக் கலை களாய்த் தோன்றிச் சுதந்தரபைரவர், சுயேச்சை பைரவர், லோகபைரவர், காலபைரவர், உக்கிரபைரவர், பிச்சையானபைரவர், நின்மாணபைரவர், பீஷணபைரவர் எனப் பெயர்பூண்டுள்ளார். இவ் அஷ்டபைரவர்களும் தெற்குப்பிராகாரத்திலுள்ள வலம்புரி மண்டபத்தில் யோகஸ்தானத்திலுள்ளார்கள்.

ஞானசம்பந்தர் ஆலயத்தில் ஞானசம்பந்தப்பெருமான் இலிங்கவடிவாய் அமர்ந்துள்ளார். இங்கு எழுந்தருளி யிருக்கும் அம்மையாரின் திருநாமம் ஸ்திரசுந்தரி (திருநிலை நாயகி) என்பதாம்.

## 4. தீர்த்தங்கள்

இத்தலத்தில் இருபத்திரண்டு தீர்த்தங்கள் உள்ளன.

1. பிரமதீர்த்தம்: இதுவே தீர்த்தங்களுள் முதன் மையானது. இத்தீர்த்தக்கரையிலேதான் திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகள் நம் சைவ உலகுய்யத் தெய்வத்

திருமுறைகள் அருளிச்செய்ய, அம்மையார் பொற் கிண்ணத்திலளித்தருளிய சிவஞானப்பாலை உண்டனர். இவ்வைபவம் பிர்ம உற்சவத்தில் இரண்டாந் திருநாளன்று இன்றும் நடத்தப்பெற்று வருகிறது.

2. **காளிதீர்த்தம்:** ஸ்ரீ காளிதேவி தன் பழிநீங்கும் பொருட்டுத் தோற்றுவித்த தீர்த்தம் இது. மேலைக்கோபுர வாயிலுக்கு அருகே வெளியில் அமைந்துள்ளது. இப்போது கரிக்குளம் என வழங்கப்படுகிறது.

3. **பராசரதீர்த்தம்:** இது பராசரரால் தோற்றுவிக்கப் பட்டது. சுவாமிகோயில் உட்பிராகாரத்தில் கிணறுவடி வாய் அமைந்திருக்கின்றது. இதிலிருந்தே எல்லாமூர்த் தங்கட்கும் அபிஷேகத்திற்குத் திருமஞ்சனம் எடுத்துச் செல்லப்படுகிறது.

4. **புறவநதி:** இது புருவடிவுடன்வந்த அக்னி தேவனால் சிபியின் தாகத்தைப் போக்குவதற்குக் காவிரி யிலிருந்து கொண்டுவரப்பெற்றது.

5. **கழுமலநதி:** இந்திரனால் ஏற்படுத்தப்பட்ட நந்தன வனத்தைப் பாதுகாப்பதற்காக விநாயகர் காகவடிவம் கொண்டு அகத்தியர் கமண்டலத்தில் இருந்ததைக் கவிழ்த்துவிட்டுக் கொண்டுவந்த தீர்த்தம். இது இந்நகரின் நாற்புறங்களிலும் சூழ்ந்துள்ளது.

6. **விநாயகநதி:** இந்நகரின் கீழ்ப்பாகத்தில் கழுமல நதியிலிருந்து பிரிந்து செல்கிறது.

மற்றவை சூலதீர்த்தம், ஆனந்ததீர்த்தம், வைணவ தீர்த்தம், இராகுதீர்த்தம், ஆழிதீர்த்தம், சங்கதீர்த்தம்,

சுக்கிரதீர்த்தம், அகத்தியதீர்த்தம், கௌதமதீர்த்தம், வன்னிதீர்த்தம், குமாரதீர்த்தம், சூரியதீர்த்தம், சந்திர தீர்த்தம், கேதுதீர்த்தம், அண்டதீர்த்தம், பதினெண் புராணதீர்த்தம் என்பவைகளாம்.

## 5. தலப்பெருமை

நாம்வாழ, புறச்சமய இருணீங்கிச் சைவவுலகு விளக்கம்பெறத் தெய்வத்திருமுறைகள் அருளிச்செய்த திருஞானசம்பந்தப்பிள்ளையார் அவதரிக்கவும், அருள் பெறவும் பேறுபெற்றது இப்புண்ணியத் தலமாதலின் இத்தலத்தை மிதிக்கலாகாது என்னும் பெருநோக்குடன் சுந்தரமூர்த்தி சுவாமிகள் நகர்ப் புறத்திருந்துகொண்டே 'கழுமல வளநகர்க் கண்டுகொண்டேனே' என்று திருப் பதிகம் பாடியுள்ளார்.

இத்தலம் கற்பகாலத்திலும் அழியாது மூலாதார க்ஷேத்திரமாக விளங்கிக் கயிலாய தரிசனப் பேற்றைக் கொடுக்கவல்லது. பாரிஜாதத்தை ஸ்தலவிருக்ஷமாக உடையது. இது கொன்றையைப்போல் பூத்து, மாதுளை யைப்போல் காய்த்து, மாவைப்போல் பழுத்து முறையே மந்திரம், மணி, மருந்தின் தன்மைகளைப் பெற்றுள்ளது. தன்னை அடைந்தோர்க்கு மலப்பிணி. உயிர்ப்பிணி, உடற் பிணிகளைப் போக்கும் தன்மையதூ என்பது புராணசித்தம்.

## 6, புராணவரலாறு


1. **தோணிபுரம்:-** ஏழு தீவுகள் அடங்கிய இப்பேரண்டத்தைப் பெரும்புறக் கடலானது ஓர் ஊழிக் காலத்தில் பொங்கி எழுந்து அழித்தது. பின்னர்

இறைவன் ஆன்மகோடிகளை மீண்டும் படைக்கத் திருவுளங்கொண்டு அக்கரவிலக்கணம் ஆதியாய அறுபத்துநான்கு கலைகளையும் ஆடையாகத்தரித்து,* பிரணவமே தோணியாகக்கொண்டு உமாமகேசுவரராக எழுந்தருளித் தோணியைச் செலுத்திக்கொண்டு வருகையில் அக்காலத்தும் அழிவுறாதிருந்த இத்தலத்தைக் கொண்டு இதுவே மூலாதாரக்ஷேத்திரமாகுமென்று அருளிச்செய்து இங்குத் தோணியுடன் வீற்றிருந்தருளு வாராயினர்.


2. **சட்டைநாதர்:** மகாவிஷ்ணு மாவலிபால் குறள் வடிவாகச் சென்று மூன்றடிமண் யாசித்து விண்ணையும் மண்ணையும் ஈரடியால் அளந்து, மூன்றாவது அடியை அவன் தலைமேல்வைத்துப் பாதாள உலகிற்குச் செலுத்தினர்; அதனல் அவர் அகங்காரங்கொண்டு உலகு நடுங்கத் திரிவாராயினர். இஃதறிந்த வடுகநாதர் தமது திருக்கரத்தால் விஷ்ணுவை மார்பில் அடித்துப் பூமியில் வீழ்த்தினர். இலக்குமி மாங்கலிய பிச்சை வேண்டிய வாறே இறைவனருள்செய்ய, விஷ்ணு உயிர்பெற்றெழுந்து வணங்கினர். அவர் தம்தோலையும், எலும்பையும் அணிந்துகொள்ளவேண்டுமென்று விண்ணப்பிக்க, இறைவனும் எலும்பைக் கதையாகக்கொண்டு, தோலைச் சட்டையாகப்போர்த்து அருள்செய்தார். அதுமுதல் பெருமான், தண்டபாணி, சட்டைநாதர், வடுகநாதர், ஆபதுத்தாரணர் எனப் பல திருநாமங்களோடு விளங்கி வருவாராயினர்.

---

* இந்த ஐதிகத்தில் இன்றும் அறுபத்துநான்கு பரிவட்டங்களாகச் சேர்த்து இதற்கென நெய்த ஒரு பரிவட்டமே சாத்தப்பட்டு வருகிறது.



" தொல்பறவை சுமந்தோங்கு செம்மைத் தோணிபுரம் "



கங்கா விஸர்ஜனர்



அர்த்தநாரீஸ்வரர்


3. **மலைவந்தவரலாறு:** ஆரியாவர்த்தத்தை ஆண்டு வந்த காலவித்து என்னும் வேந்தன் புத்திரப்பேறின்மையினால் வருந்தி உரோமச முனிவரைக்கண்டு தன் கவலையைத் தெரிவித்தான். முனிவரும் கயிலையின் சிகரத்தைத் தரிசித்தால் கவலை நீங்கும் என்று கூறினர். எவ்வாறு தரிசிக்க முடியும் என்று கவலையுற்ற வேந்தனை நாட்டுக்கு அனுப்பிவிட்டுக், கயிலாயம்சென்று முனிவர் தவஞ்செய்தார். இறைவன் முனிவர்முன் தோன்றி வேண்டுவது யாதென, முனிவரும "தென்னாட்டு மக்கள் தரிசிக்கவேண்டி இம்மலைச்சிகரம் ஒன்றைத் தென் திசையில் தோற்றுவித்து அதில் உமாதேவியுடன் வீற்றிருந் தருளவேண்டும்" என்று பிரார்த்தித்தார். அதற்குக் கயிலாயபதி "ஆதிசேடனுக்கும் வாயுவுக்கும், போர் நடக்கும்பொழுது இது நிறைவேறும்" என்று அருள் புரிந்தார். பின்னொருநாள் ஆதிசேடனுக்கும், வாயுவுக்கும் தம்முள் யார்வலியர் என்பதுபற்றிப் போர் நிகழ்ந்தது. ஆதிசேடன் தனது ஆயிரந்தலையினாலும் கயிலாய மலையை இறுகமூடிக்கொண்டான். வாயு தன்னால் இயன்ற அளவு காற்றை வீசியும் மலையைச் சிறிதுகூட அசைக்கமுடியவில்லை. உலகம் ஊழிக்காலம் போல் அலைந்தது. அதுகண்ட தேவர்களின் வேண்டுகோளின்படி ஆதிசேடன் தனது ஒரு தலையை மெல்லத் தூக்கினான். உடனே மலைச்சிகரம் பெயர்ந்து ஒரு பெருங் கிளையும் பல சிறுகிளைகளுமாகப் பதினொரு கிளைகள் விழுந்தன. பெருங்கிளையான சிகரம் இறைவன் அருளால் இருபது பறவைகளால் இங்குக் கொண்டுவந்து வைக்கப் பட்டது. காலவித்து என்னும் அரசனும் தரிசித்தான். பின்னர் அம்மலை மறைந்துநிற்க, மலைவந்து தங்கிய இடத்தில் சுதையால் இருபது பறவைகள் தாங்கியது

போலவே கட்டுமலை ஒன்றைக் கட்டுவித்து அரசனும் தன் நகர் சேர்ந்தான்.

4. **திருஞானசம்பந்தர்:** திருஞானசம்பந்தப் பிள்ளையார் சிவபாதவிருதயர் என்னும் பிராமணோத்தமருக்குத் திருக்குமாரராகச் சற்புத்திர மார்க்கத்தை விளக்கவும், சைவசமயம் யாங்கணும் பரவவும் அவதரித்தார். மூன்றுண்டு நிரம்பாத பிள்ளையார் பிரமதீர்த்தத்திற்கு நீராடச் சென்ற தம் தந்தையாரோடு தாமும் சென்றுர். சிவபாத விருதயர் பிள்ளையாரைக் கரையில் இருக்கச்செய்து நீராடிக்கொண்டிருந்தார். அப்போது பிள்ளையார் பூர்வ உணர்ச்சிமேலிட, பார்வதிதேவியாரையும் பரமேசுவரனையும் நினைந்து **அம்மே! அப்பா!!** என்று அழுதருள, பெருமானும் அமமையை நோக்கித் திருமுலைப்பால் கொடுத்தருள்க என்றருளினர். அவ்வாறே அம்மையாரும் பொற்கிண்ணத்தில் பாலைப்பெய்து ஞானத்தைக் குழைத்து ஊட்டியருளினுர். அதையுண்ட பிள்ளையாரும் ஞானசம்பந்தம்பெற்றுத் **திருஞானசம்பந்தர்** ஆயினுர். ஸ்நானம் முடித்து வந்த தந்தையார் பிள்ளையாரை நோக்கி உனக்குப் பால்கொடுத்தார் யார்?' என்று கோபித்துக் கேட்க, பிள்ளையாரும் இடபாரூடராய் அம்மையப்பராய் எழுந்தருளிவந்த - சுட்டியறிவிக்க முடியாத பரம் பொருளைத் தமது ஒரு திருவிரலாற் சுட்டிக்காட்டித் **தோடுடைய செவியன்** என்னுந் திருப்பதிகம் பாடியருளினுர். பின்னர், பிள்ளையார் சைவசமயம் எங்கும் நிலைபெறுமாறு பற்பல செயற்கருஞ் செயல்களைச் செய்து, தலங்கள் தோறும் சென்று அரிய தேவாரப்பதிகங்களை அருளி, இப்பதிக்கருகிலுள்ள நல்லூர்ப்பெருமண (ஆச்சாள்புர)த்தில் தமது பதினுருவது வயதில் வைகாசி



சிவபாதவிருதயர் ஞானசம்பந்தரைக் கோல் கொண்டு ஓச்சுதல்



அலைபுனல் சூழ் பிரமபுரத்து அருமணியின் பெருங்கோயில்.

மூலத்தில் தமக்கு நிகழ்ந்த திருமணத்தின் பொருட்டு வந்த அன்பர் கூட்டத்துடன் இறைவன் அருட்சோதியிற் புக்குன்றி யுடனுைர்.

## 7. வழிபட்டோர்

குமரவேள், ஸ்ரீகாளி, பிரமன், விஷ்ணு, குரு, இந்திரன், சூரியன், சந்திரன், அக்கினி, சேடன், ராகு, கேது, வேதவியாசர் முதலியோர் இத்தலத்திறைவனை வழிபட்டுப் பேறுபெற்ருர்கள். விரிவைத் தலபுராணத்திற் காண்க.

## 8. அன்பர்கள்

ஞானபூமியாகிய இத்தலத்தில் அனேக அன்பர்கள் வாழ்ந்திருந்தார்கள். அவர்களில்:-

திருஞானசம்பந்த சுவாமிகள் :— திருமுறை ஆசிரியர்களுள் முதல்வராகிய இவர்கள் இத்தலத்திற்கு அருளிச்செய்த பதிகங்கள் 67. இவர்களுடைய வரலாறு முன்னரே புராணவரலாற்ருேடு சேர்த்து அறிவிக்கப் பட்டுள்ளது.

திருநாவுக்கரசு சுவாமிகள் :— திருநாரையூரை வணங்கிக்கொண்டு சீகாழி வந்தவர் ஞானசம்பந்தப் பிள்ளையாரைக் கண்டு வணங்கி அருட்கடலும் அன்புக் கடலுமாகக் கலந்து திருத்தோணியப்பரை வணங்கத் திருக்கோயிலுட் சென்ருர்; திருப்பதிகம் பாடினுர். பாடிய பதிகங்கள் 3.

**சுந்தரமூர்த்தி சுவாமிகள் :—** தில்லையை வணங்கிக் கொண்டு ஆனந்தக்கூத்தர் ஆணையின்படி, திருவாரூருக்கு எழுந்தருளுகின்றவர்கள் காழியம் பதியை அடைந்தார்கள். இப்பதி ஞானசம்பந்த சுவாமிகளது அவதார ஸ்தலமாதலின், மிதித்தற்கு அஞ்சிப் புறநகரிலேயே 'கழுமலவளநகர்க் கண்டுகொண்டேனே' என்று பதிகம் பாடிச் சென்றார்கள். இவர்கள் பாடிய பதிகம் 1.

**மாணிக்கவாசக சுவாமிகள் :—** பாண்டிய நாட்டை விட்டுத் தில்லைக்கு எழுந்தருளும்போது திருக்கழுமலத்தை அடைந்து, 'உம்பர்கட்கரசே!' என்று தொடங்கும் பிடித்தபத்து அருளிச்செய்து போற்றினார்கள்.

**பூந்துருத்தி நம்பிகாடநம்பி :—** இவர்கள் காழிக்குத் தனியே திருவிசைப்பா கூறவில்லை; ஆனாலும், ஞானசம்பந்த சுவாமிகள் ஆட்கொண்ட அருளிப்பாட்டினைச் 'சம்பந்தன் காழியர்கோன் தன்னையும் ஆட்கொண்டருளி' என்று வைத்துப் போற்றியுள்ளார்கள்.

**பட்டினத்தடிகள் :—** பெருந்தன வணிகராய் இருந்தும் ஞானமுதிர்வால், ஒரேகாலத்து ஒருசேர எல்லாவற்றையும் துறந்த உண்மை ஞானியாகிய இவர்கள் திருக்கழுமலத்திற்கு எழுந்தருளியபோது, திருக்கழுமல மும்மணிக்கோவை என்ற பிரபந்தத்தை இயற்றியருளினார்கள்.

**கணநாதர் .—** சீகாழியில் அந்தணர் குலத்தில் பிறந்தவர். திருமாலைகட்டுதல் முதலிய இறைதிருப்பணியில் எல்லோரையும் பயிற்றுவிப்பவர். அதனால் திருக்கயிலையிலும் கணநாதராய் இருக்கும் பெரும்பேறுபெற்றார்.

**நம்பியாண்டார்நம்பிகள் :—** திருநாரையூர் ஆதிசைவ குலத்தில் அவதரித்தவர். பொல்லாப் பிள்ளையாரின் பேரருளால் திருமுறைகளை விளக்கங்கண்டவர். காழி ஞானசம்பந்தர்மீது திருமும்மணிக்கோவை, திருச் சண்பைவிருத்தம், திருத்தொகை, திருவந்தாதி, திருவுலா மாலை, திருக்கலம்பகம் ஆகிய நூல்கள் இவரால் பாடப் பெற்றன.

**சேக்கிழார் :** இரண்டாங் குலோத்துங்கனுக்கு உதவி யமைச்சராய் இருந்து, காழியைப் பலகால் தரிசித்த பயனுல் சிறப்பாகத் திருஞானசம்பந்த சுவாமிகள் புராணத்தும், மற்றும் பிற இடங்களிலும் சீகாழியைப் பலவாருகப் பாராட்டியுள்ளார்கள்.

**அருணகிரிநாதர் :—** முருகன் அன்பர்களில் தலை சிறந்தவர். காழிக்குமரவேளைத் திருப்புகழ் பாடிச் சிறப்பித்துள்ளார்.

**மச்சுச்செட்டியார் :—** சீகாழியில் சைவச் செட்டியார் பரம்பரையில் அவதரித்தவர்கள். உலகத் தீமைகளைப் பார்க்க விருப்பமில்லாது மச்சைவிட்டு இறங்காமையால், மச்சுச்செட்டியாரென்று பெயர் பெற்றுர்கள். இவர்களுக்கு அருள் நமச்சிவாய தேசிகர் என்னும் பெயருண்டு. இவர் களும் உமாபதி சிவாசாரிய சுவாமிகளோடு மறைஞான சம்பந்தரிடம் அருளுபதேசம் பெற்றவர்கள். இவர் களுடைய மாளிகை சீகாழி வடக்குவீதியிலிருந்தது.

**காழிக் கங்கை மெய்கண்டார் :—** இவர் மச்சுச் செட்டியாரின் மாணவர். வெண்ணெய் மெய்கண்டா ரின் வேறு என்பதற்காகக் கங்கைமெய்கண்டார் என்று சிறப்பித்துப் பாராட்டப்பெற்றவர். ஞானுசாரியருள் ஒருவர்.

**சீகாழிச் சிற்றம்பலநாடிகள் :—** இவர் கங்கை மெய் கண்டாரின் மாணவர். சீகாழி வடக்குவீதியிலேயே இவர்கள் மடம் இருந்தது. இவருடைய சந்ததி சைவா சாரிய பரம்பரையாகப் பெண்வழி மரபில் இருக்கின்றது. சிவப்பிரகாசத்திற்குக் கொளுச்சூத்திரம் செய்தவர் இவரே. இவர்களுக்கு 63 மாணுக்கர்கள். ஒருவர்தவிர அறுபத் திருவரோடு பரிபூரண மெய்தியவர்கள். இவருக்குக் காழிப்பழுதை கட்டிச் சிற்றம்பலநாடி பண்டாரம் என்றும் பெயருண்டு. யாக்கை நிலையாமையையும், அதன்இழிவை யும் உலகவர்க்கு நன்கு விளக்கக் காலில் எப்பொழுதும் பழுதைகட்டி இருப்பார். அதனுல் பழுதைகட்டி என்ற அடைமொழி கொடுக்கப்பட்டது.

**கண்ணுடையவள்ளல் :—** இவர் திருஞானசம்பந்த சுவாமிகளுடைய திருவருள்பெற்றவர். இவர் செய்த நூல் ஒழிவிலொடுக்கம் முதலியன. காழி மேலவீதியிலுள்ள வள்ளலாதீனஸ்தாபகர் இவரே.

**திருத்தோணியப்பர் :—** இவர் தத்துவப்பிரகாசரது சீடர். தமது குருவாகிய தத்துவப்பிரகாசரோடு கிருஷ்ண தேவரது பிரதிநிதியாகிய சாளுவதேவரைக் காணச்சென் ருர். அவர் தமது ஆசாரியரையும் தம்மையும் இழிவாய் நடத்தியதைக் கண்டு வருந்தி ‘ ஆயிரவர் புலவோரில் ’ என்னும் பாடலைச் சொல்லி அரசப் பிரதிநிதிக்குப் புத்தி புகட்டினுர். ‘ முட்டை கலம் புழுதி ’ என்ற பாடலைச் சொல்லித் தமக்குக் கொடுத்த வீட்டினியல்பை விளக் கினுர்.

**சீகாழி மறைஞானசம்பந்தர் :—** சிவஞானசித்தியா ருக்கு உரை இயற்றிய அறுவரில் ஒருவராகிய இவர், ஞானசம்பந்த உபதேசபரம்பரையில்வந்த அறுபத்துநான்கு

வள்ளல் சந்தானத்தில் ஆனந்தவள்ளல் சந்தானத்தைச் சார்ந்தவராவர். பிராமணர் என்று அறுவருரைப் பதிப்பாசிரியர் கூறுகின்றார். அவர் கூறும் இம் மறைஞான சம்பந்தர், கண்கட்டி மறைஞானசம்பந்தராக முத்திநிச்சயத்தால் தெளியப்பெறுவதால் அவர் உரை ஆராயத் தக்கது.

**அருணந்திசிவாசாரிய சுவாமிகள் :—** இவர்கள் சண்டையர் தலைவன் என்று குறிப்பிடப்பெறுகிறார்களென்பதும், இவர் அவதாரத் தலம் சீகாழியே என்பதும் பிரபல ஆதாரங்களால் நிலைபெறும் செய்தி என்று சோமசுந்தர தேசிகர் கூறுவார்.

**சண்டை ஞானப்பிரகாசர் :—** இவர் 'சண்டைநகரிலிருந்த சேந்தையர்காவலராகிய ஞானப்பிரகாசர்' என்று சென்னைக் கையெழுத்துச் சுவடிகளின் அட்டவணை கூறுகின்றது. அதனை ஒட்டி, சிவஞானசித்தி ஞானப்பிரகாச முனிவர் உரைப்பாயிர அகவலில், 'சண்டையர் தலைவன், கற்றவர் பரவும் சேந்தையர் காவலன், நற்றவரடிபணி ஞானப்பிரகாசன்' என்று கூறப்பெற்றுள்ளது. ஆதலால் இந்த ஞானப்பிரகாசர், திருஒற்றியூர் ஞானப்பிரகாசரின் வேருவரோ என்று ஐயப்பட இடமுண்டு. இது ஆய்விற் குரியது.

**சிவஞானதேசிகர் :—** இவர்கள் தருமையாதீனத்துப் பத்தாவது குருமூர்த்திகளாவார்கள். இவர்கள் இயற்றிய நூல் சீகாழி சட்டைநாதசுவாமிகள் விஷயமான ஆபதுத்தாரணமாலை என்பது.

**மாசிலாமணி தேசிகர் :—** இவர்கள் திருவாவடுதுறை ஆதீனத்து எட்டாவதுமகாசந்நிதானமாவார்கள். இவர்கள் இயற்றியநூல் திருஞானசம்பந்தர் பிள்ளைத்தமிழ்.

**சிதம்பரநாத முனிவர் :—** இவர்கள் குரு ஆணைப் படி சீகாழி ஆலய நிர்வாகப்பணியை ஏற்று நடாத்தி வந்தார்கள். இவர்களோடு பூர்வாசிரமத்தில் உடன் கல்விகற்றவர் தில்லையாடியில் பிறந்த அருணாசலக் கவிராயர். ஒருபோது வியாபார நிமித்தமாகப் புதுச்சேரிக்குப் போகும் வழியில் சீகாழிக்குவர அங்கே கட்டளை விசாரணையில் சுவாமிகள் இருப்பது அறிந்து பார்க்கச் சென்று அளவளாவினர். சுவாமிகள் தாம் சீகாழிக்கு ஒரு பள்ளுப் பிரபந்தம் பாடத் தொடங்கியிருப்பதையும், அதனை முடிக்க அவகாசமின்மையையும் உணர்த்தி இதனை இருந்து முடித்துச் செல்க என்று கூறினார்கள். சுவாமிகளது அன்புரையை எதிரேயே மறுத்துச்செல்லும் மனவாற்றலில்லாதவராய், கவிராயர் பிரபந்தத்தைப்பாடி முடித்து அங்கிருந்து மறுநாள் இரவு அப்பிரபந்தத்தை மற்றொருவர் கையிற்கொடுத்துச் சுவாமிகளிடம் சேர்ப்பிக்கச்செய்து தாம் புதுவைக்குச்சென்றார்.

முனிவர்பிரான் கவிராயர் சென்றுவிட்டார் என்பதைக் காலையிலறிந்துகொண்டு, எவ்வாற்றானும் அவரை இங்கேயே இருத்திவிடவேண்டும் எனத் திருவுளங் கொண்டு, கவிராயர் அழைப்பது போலக் கடிதம் அனுப்பி அவர்கள் குடும்பத்தாரை வரவழைத்துச் சீகாழியில் வீடொன்று வாங்கி அதில் இருக்கச் செய்தார்கள். சிலநாளில் கவிராயர் மீண்டு வந்தனர். சுவாமிகளைத் தரிசித்துச் சின்னாள் உடனிருந்தனர். ஒரு நாள் சுவாமிகள் "வீதிவலம் வருவோம்" என்று கூறி உடனழைத்து வருங்கால் வடக்குவீதி அடைந்ததும் தம் குடும்பம் ஒரு வீட்டில் இருப்பதை அறிந்து ஆச்சரிய மடைந்தார் கவிராயர். சுவாமிகள் "உம்மை உட னிருத்து வதற்காகவே இக்காரியம் நம்மால் செய்யப்

பெற்றது'' என்று அறிவித்தார்கள். கவிராயர், கல்வியை நுகரும் சுவாமிகள் கருத்தையறிந்து காழியிலேயே வசிப்பாராயினர். அது முதல் அப்புலவர் தில்லையாடி அருணாசலக் கவிராயர் என வழங்கப்பெற்றார்.

**அருணாசலக்கவிராயர் :—** தில்லையாடியிலே கார் காந்த வேளாளர் மரபிலே பிறந்தவர். தருமபுர ஆதீன வித்வான்களில் ஒருவர். இவருடைய வித்யாகுரு அம்பலவாணக் கவிராயர். இவர்கள் சீகாழியைப்பற்றிப் பாடிய நூல்களுள் காழிப்பள்ளு, காழியந்தாதி, காழிப் புராணம் முதலியன. இராமாயணக் கீர்த்தனம் பாடியவர் இவரே. இவர் கி. பி. 1712 முதல் 1779 வரை இருந்தவர்.

## 9. கல்வெட்டுகள்

இத்தலத்தைப் பற்றிய கல்வெட்டுக்கள் படி யெடுக்கப்பட்டவை 46-ம் எடுக்கப்படாதது ஒன்றும் ஆக 47 கல்வெட்டுக்கள் உள்ளன. அவற்றுள் இரண்டாங் குலோத்துங்கன் கல்வெட்டு மூன்றும், இரண்டாம் இராஜராஜதேவனின் கல்வெட்டுக்கள் ஐந்தும், மூன்றாங் குலோத்துங்கன் கல்வெட்டுக்கள் ஏழும், வீரராஜேந்திரன் கல்வெட்டு மூன்றும், இராஜாதிராஜதேவர் கல்வெட்டு ஒன்றும், கோனேரின்மைகண்டான் என்ற குறிப்பில் இரண்டு கல்வெட்டுக்களும், மூன்றாம் இராஜராஜ தேவர் கல்வெட்டு இரண்டும், கோப்பெருஞ்சிங்கன் கல்வெட்டு நான்கும், பெயர் குறிக்கப்படாத பரகேசரிவர்மன் கல்வெட்டு ஒன்றும், இராஜகேசரிவர்மனது மூன்றும் வீர விருப்பண்ண உடையார்கல்வெட்டு இரண்டும், ஆண்டு மட்டும் குறிக்கப்பட்டது மூன்றும், கிருஷ்ண தேவராயரது.

ஒன்றும், வேங்கடதேவ மகாராயரது ஒன்றும், பெயர் குறிக்காதன எட்டும் ஆக 46 கல்வெட்டுக்கள் உள்ளன. 140 of 1910ல் எடுக்கப்பட்ட கல்வெட்டுக்குறிப்பு கிடைத்திலது.

கல்வெட்டுக்களால் பலவழக்கங்களும், நிலஅளவை முறைகளும், தலம் மூர்த்தி இவைகளின் அமைப்புக்களும் பிறவும் அறியப்பெறும். இத்தலம் ராஜராஜவளநாட்டுத் திருக்கழுமலநாட்டுப் பிரமதேயம் திருக்கழுமலம் என்று குறிக்கப்பெற்றுள்ளது.

பிரமபுரீசர் திருக்கழுமலமுடையார் என்றும், தோணியப்பர் திருத்தோணிபுரம் உடையார் என்றும், தோணியப்பர் பக்கத்திலுள்ள அம்மை பெரியநாச்சியார் என்றும் சம்பந்தப் பெருமான் ஆளுடையபிள்ளையார் என்றும் குறிக்கப்பெறுகின்றார்கள்.

இங்குள்ள ஆளுடைய பிள்ளையார் கோயிலில் முதன் முதல் ஆளுடையபிள்ளையார் திருவுருவத்தைத் தலத்திற்கு எழுந்தருளச் செய்தவள் மூன்றுவது குலோத்துங்கனுடைய அடுக்களைப் பெண்டுகளிலே மூத்தவள் இராஜவிச்சாதரி என்பாள். இதனால் அக்காலத்தரசர்கள் பட்டத்தரசியாரையன்றி அடுக்களைப் பெண்டிராகப் பலரையுடையராக இருந்தனர் என்பதும் அறியப்பெறும். அன்றி அடுக்களையில் உள்ள ஏவற்பெண்டிராகவும் இருக்கலாம். ஆனால் பெயர் ராஜவிச்சாதரி என்றிருப்பது அவள் குலவுயர்வைக் குறிப்பதாகலாம். அவள் ஆளுடையபிள்ளையாரை முதன் முதல் எழுந்தருளுவித்தாள்

குலோத்துங்கனுக்கு மூத்தியவனுகிய இரண்டாம் ராஜராஜனது கல்வெட்டு, கங்கைகொண்ட சோழபுரத்தா ளொருவன் ஆளுடைய பிள்ளையார் கோயில் முதற்பிரா காரம் திருமதில் எடுக்கப் பொன் கொடுத்ததை அறிவிக் கிறது. ஆதலால் எழுந்தருளுவித்த என்பதற்குத் திருவீதி உலாச் செய்வித்த என்று பொருள் கொள்வதேபொருந்தும். சிலர் திருவுருவத்தைப் பிரதிஷ்டை செய்ததைக் கருது கின்றனர். அது பொருந்தாது. (388 of 18).

**நில அளவை:**

நிலங்களை இப்போது இருப்பதைப்போலவே 100 குழி ஒரு மாவாகவும், 20 மா ஒரு வேலியாகவும் இரண்டாங் குலோத்துங்கன் காலத்திலும் கணக்கிடப் பட்டிருந்தது (374 of 18)

விலைக்கு விற்கின்றபோது அந்தக் காலத்திலுள்ள நிறைப் பொன்னையே குறிப்பிடுவது வழக்கம். வீரராஜேந் திரன் காலத்திய கல்வெட்டொன்று இராஜராஜப்பெருவிலை கொண்டு என்று குறிப்பிடுகிறது.

இராஜராஜன் மாடை என்ற நிறைகல் வடிக்காற்றில் இருந்தது இங்கே நினைவூட்டத்தக்கது. நிலங்களுடைய பரிவர்த்தனை விற்பனை இவற்றில், புறவுவரி பார்ப்பாரும் கர்ணநாயகத்தாரும், பெருங்குறிச் சபையோரும் கை யெழுத்திடுவது வழக்கம். நிலவிலையை ஆவணக்களரி யின் முன்னிலையில் வாங்கிக் கொள்வதும் குறிப்பிடப்படு கிறது. கோயில்களுக்கு நிலம் ஒதுக்குகின்ற காலத்து, பசாளம் (மசானம்) அந்தராயம் (இடைவெளி) இவற்றை யும் இல்லிப் பூண்டும், இராவணன் தாடியும் முளைத்து

இருக்கின்ற அலைவாயும் மணற்குன்றும் செம்படவர் குடி இருப்பும் இவற்றை விலக்கியே விற்பதும் இறையிலி செய்வதும் வழக்கம். நிலங்களை விற்கும்போது நிலத்தோடு நீராணிக்கக்காரர்களையும் சேர்த்து விற்பதும் குறிப்பிடப்படுகிறது.

**உருவ அமைப்பு :**

திருநட்டப்பெருமான் ஆளுடைய பிள்ளையாருக்கென்று வருவதால், ஞானசம்பந்தர் உருவம் ஒரு காலைத் தூக்கி ஒருகாலை ஊன்றி வலது கைச் சுட்டு விரல் நீட்டிக் கூத்தாடுகின்ற குழந்தையைக் காட்டும் திருவுருவ அமைப்பாக இருக்கலாம்.

**திருமுறைப் பற்று :**

அக்கால அரசர்களுக்குள்ள திருமுறைப்பற்று எல்லைக் குட்பட்டதன்று. திருமுறை ஏடுகளைப் புதுப்பிக்கவும், பூசிக்கவும், போற்றவும் மானியமளித்துக் காப்பாற்றி வந்தனர்.

**வரலாறு :**

பொத்தப்பிச் சோழன் என்பவன் வீரபாண்டியனை வென்று அங்கிருந்த நடராஜமூர்த்தியைச் சீகாழியில் கொண்டுவந்து வெற்றிப்பரிசாக வழங்கினான்.

**வீரராஜேந்திரன்** கி. பி. 1055—1070.

இவன் இராஜமகேந்திரனுக்குப்பின் அரசை மேற்கொண்டவன். இவனுடைய ஆரும் யாண்டில் தொங்கு

விளக்குகள் இரண்டு வைக்கவும் எரிக்கவும் சயங் கொண்ட சோழமண்டலத்துப் பழயனூரில் நிலம் விடுத் திருக்கிருன் (163 of 18). அதேயாண்டில் குலோத் துங்க சோழவளநாட்டு திருநறையூர் நாட்டு வேளூர் வாசியான ஒருவரால் ஆளுடைய பிள்ளையார்கோயில் நிலங்கள் பரிவர்த்தனை செய்யப்பட்டன (376 of 18).

இவன் ஆட்சி ஏழாம் யாண்டில் திருத்தோணிபுர முடையார் பெரியநாச்சியார் நிவேதனத்திற்காக ஸ்ரீபாத தூளி சதுர்வேதிமங்கலத்துத் தென்பக்கத்துக் கிராமமான கிடாரங்கொண்ட சோழநல்லூரில் நிலம் வழங்கிய செய்தி அறிவிக்கப்படுகிறது. இன்னும் இராசராச வளநாட்டு கருப்பூர் உதையஞ் செய்தான் தாழியான் சோழேந்திர சிங்க விழுப்பரையர் என்னும் அரசியல் அலுவலாளர் ஒருவர் பிரமதாயம் விதித்ததைப் பேசுகிறது (360 of 18).

**குலோத்துங்கன் II** இ. பி. 1133.

இவன் விக்கிரமசோழன் மகன். ஆசிரிய அன்பு நீங்காதவன். அநபாயன் என்று சிறப்பித்துப் பேசப்பெற் றவன். இவனுடைய ஆட்சியாண்டு மூன்றில் முதலாங் குலோத்துங்கன் தன் ஆட்சியாண்டில் 18-ல் கொடுத்த இறையிலி நிலம், தரிசாகக்கிடக்க, அதனைத் திருத்தி வேறு ஒருவருக்கு அளித்தான் (380 of 18).

நான்காம்யாண்டில் சம்பந்தசுவாமிகள் கோயிலில் நெடுநாளாகவே தேவாரத்திருமுறைகள் எழுதிவைக்கப் பெற்றிருந்தன. அவற்றைப் பூசித்துக் கண்காணிக்க ஒரு தமிழ் விரகர் நியமிக்கப்பெற்றிருந்தார். அவர் கடமை, திருமுறை ஏடுகள் பழுதடையாமல் பாதுகாத்துக்கொள்ளு தலும், பழுதடையின் அவற்றை எழுதிப் புதுப்பிப்பதும்,

அவற்றைப் பூசிப்பதுமேயாம். அவர் கிராமக் காரியம் பார்ப்பாரை இறையிலியாக நிலம் வேண்டிக்கொள்ள அவர் விருப்பப்படி நிலம் விடப்பட்டது (381 of 18).

பத்தாம்யாண்டில் ஜயங்கொண்டசோழவளநாட்டு ஆக்கூர்நாட்டுத் தலைச்செங்காட்டில் மும்முடிச்சோழன் பேரம்பலம் என்ற பொது மன்றத்தில் சபையார்கூடி திருஞானசம்பந்தப்பிள்ளையார் பாற்போனகத்துக்கு நிலம் விடப்பட்டது (37௪ of 18).

**இராஜராஜன் II** கி. பி. 1144.

இவன் II-ம் குலோத்துங்கன் மகன். இவனது ஆட்சி இரண்டாம்யாண்டு நாள் இருநூற்றுப்பத்தொன்பதில் ஆளுடையபிள்ளையார்கோயில் திருப்பணிக்காகக் கங்கை கொண்ட சோழபுரத்திலுள்ள ஒருவரால் நிலம் விடப் பெற்றது (288 of 18). ஆட்சி பதினொராம்யாண்டிலும் ஆளுடையபிள்ளையாருக்கு நிலம் விடப்பெற்றுள்ளது (123 of 1896).

ஆட்சி பன்னிரண்டாம்யாண்டில், ஆளுடையபிள்ளையார் கோயிலில் எழுந்தருளுவித்திருந்த மங்கையர்க்கரசி நாச்சியாருக்கு நிவேதனத்திற்காக வீரசோழநல்லூரில் நிலம் விட்டமை குறிக்கப்பெறுகிறது (375 of 1918).

பதினெட்டாம்யாண்டில், நாலூரில் உள்ள ஒருவரால் திருநந்தனவனப்புறமாக நிலம் அளிக்கப்பெற்றது (390 of 1918).

இருபத்துநான்காம்யாண்டு ஆநாங்கூரில் உள்ள ஒருவர் நந்தனவனத்திற்கு நிலம் விட்டார் (389 of 18).

**இராஜாதிராஜன் II** கி. பி. 1165.

இவன் 1162-ல் பட்டத்திற்கு வந்தாலும் நான்கு ஆண்டுகள் வரையில் இராஜராஜன்பேராலேயே அரசாட்சி நடந்துவந்தது. II-ம் இராஜராஜனுக்கு நேர் ஆண் மகவு இல்லாமையால் அமைச்சர்கள் அவன் ஆணையின் வண்ணம் தாயத்தாளுகிய இவனைத் தேர்ந்தெடுத்தனர். இவன் மிகவும் வயதானவன். இவன் பட்டமேற்ற பதினேராவது ஆண்டில் ஆளுடைய பிள்ளையார் கறிய முத்துக்கு பயிறுக்காக வெண்மலைத் தலைவனுன ஆட்கொண்ட நாயகன் நட்டபெருமான் என்பவனுல் நிலம் விடப்பெற்றது. (379 of 1948)

குலோத்துங்கன் III கி. பி. 1178.

இவன் II-ம் ராஜாதிராஜன் தம்பி. மதுரையில் நிகழ்ந்த கலகத்தை யடக்கித் தமதாக்கி, திரும்பவும் விக்கிரம பாண்டியனுக்கே கொடுத்து மீண்டான். இவன் ஆட்சி மூன்ரும் யாண்டில் கும்பரவி பூர்வ பக்கத்துச் சப்தமி திங்கட்கிழமை அநிலம் (சுவாதி) கூடிய நாளில், தேவாரப் பண் இசைப்பார்க்கும் பயிற்றுவார்க்குமாக நிலம் விட்டான் (287 of 18).

9-ம் யாண்டு 176-ம் நாளில், விளக்குக்காக நிலம் அளித்த செய்தி அறிவிக்கப் பட்டுள்ளது. அதன் கீழ் முதற் குலோத்துங்கனுடைய 15-வது யாண்டில் நிலம் அளக்கப் பட்ட தென்றும், அதன் பிறகு அளக்கப்படவே இல்லை என்றும், மக்கள் கோயிலுக்கு வேண்டிய நிலங்களை மேலும்மேலும் பெருக்கிக்கொண்டேபோனுர்கள் என்றும் அறிவிக்கின்ற வாக்கியங்கள் அமைந்துள்ளன. (368 of 18). முதற் குலோத்துங்கன் நிலம் அளந்த செய்தியையே 125 of 1896 கல்வெட்டும், அறிவிக்கிறது.

ஆட்சி 11-ம் யாண்டில் பாண்டிநாட்டிலே வீர பாண்டியன் விளைவித்த கலகங்களை அடக்கச் சென்றவர்களில், சீயகங்கன் யாமனூரான பொத்தப்பிச் சோழனு மொருவன். இந்தச் சீயகங்கனே பவணந்தியை நன்னூல் இயற்றச்செய்தவன் ஆவன். இப்பொத்தப்பிச் சோழன், தனது வெற்றிக்கு அறிகுறியாக மதுரையிலிருந்து நடராச மூர்த்தியைக் கொண்டுவந்தான். சீகாழியிற் பிரதிட்டை செய்வித்தான். நித்திய பூசைக்காக வேண்டும் நிலங்களை விட்டான். 12-ம் யாண்டில் ஆளுடையபிள்ளையார் கோயில் தேவகன்மிகள் கேட்டுக்கொண்டபடி, எதிரிலி சோழ சதுர்வேதிமங்கலத்துப் பெருங்குறிச் சபையார் நிலம் அளித்தார்கள் (377 of 18).

14-ம் யாண்டில் இராசாதிராச வளநாட்டுத் திருக்கழுமலநாட்டுப் பிரமதேயமான திருக்கழுமலத்து இராசராச வளநாட்டு நடுவில்நாட்டு ஆறுங்கூர் குன்றைக் கிழான் மகளும் பேத்தியுமான இரு பெண்களால் தங்களுக்கும் தங்கள் கணவர்களுக்கும் நன்றாக நந்தனவனப் புறமாக நிலம் அளிக்கப்பெற்றது. அந்நிலங்கள் ஜெயங்கொண்ட சோழமண்டலத்து மேல்மலை பழையனூர் நாட்டுப் பழையனூரும், சுற்றமலைவளநாட்டு வெண்ணிக் கூற்றத்துப் பெருமூரும், இராசராசவளநாட்டு மேட்டூர் நாட்டு ஒழுகரை என்கின்ற குலோத்துங்கசோழநல்லூரும் ஆம் (364 of 18). அதேயாண்டில், அரசசுற்றமான எதிரிலிப்பெருமாள் என்பார் கோயிலுக்கு வைத்த நிபந்தத்தை நந்திமங்கலம் கிழான் சூரியதேவன் அபகரித்துக் கொள்ள முறைப்பாடுண்டானபோது, கணக்கனும் சபையோரும் சேர்ந்து நிலத்தை மீட்டு அளித்தனர் (364 of 18).

17-ம் யாண்டில் ஆளுடைய பிள்ளையாருக்குக் குலோத்துங்கசோழ சதுர்வேதி மங்கலத்துச் சபையார் நந்தனவனத்திற்கும் அதன் பராமரிப்புக்குமாக நிலம் அளித்தார்கள் (378 of 18).

27-ம் யாண்டில் ஆளுடையபிள்ளையார் கோயிலுக்காக ராசாதிராச வளநாட்டுத் திருவாலியான எதிரிலிசோழசதுர்வேதிமங்கலத்துத் திருமுல்லைவாயில் நிலங்களை இறையிலியாக அளித்தது (383 of i8).

**இராசராசன் III** கி. பி. 1216.

இவன் மூன்றுங் குலோத்துங்கன் மகன், தகப்பனைப் போலச் சிறந்த வீரமுடையவன் அல்லன். அதனால், சுந்தரபாண்டியன் படையெடுத்து வந்தான். தன் மாமனை கோசளன் உதவியால் போரை வென்றான். இவனுடை ஆட்சி இரண்டாம் யாண்டில் ராசாதிராச வளநாட்டுத் திருக்கழுமலத்தைப்பற்றியும், இராசராசேசுரமுடைய திருக்கோயிலைப்பற்றியும், குலோத்துங்கன் 35-ம் யாண்டு குறிப்புக்கள் மீண்டும் எழுதப் பெற்றுள்ளன. (368 of 18).

8-ம் யாண்டில், ராஜாதிராஜவளநாட்டுத் திருவாலியான மும்முடிச்சோழ சதுர்வேதி மங்கலத்துப் பனங்குடியில் நிலம் விற்றமையும், திருத்தோணிபுரம் உடையார்க்கு நிலம் இறையிலியாக அளித்தமையும் குறிக்கப் பெறுகின்றன. இதில் நெறியுடைச்சோழ மூவேந்தவேளான் என்ற அதிகாரி குறிப்பிடப்பெறுகிறான் (392 of 18.)

17-ம் யாண்டு 258-ம் நாள், தோணிபுரத்துத் திருக்கோயிலுக்கு ஆளுடைய நாயனார் பருகப் பொன் வட்டில் அளிக்கப்பெற்றது (362 of 18).

**கோப்பெருஞ்சிங்கன் II**  கி. பி. 1243.

இவன் பல்லவ வம்சத்தைச் சேர்ந்தவனுகக் கருதப் படுகிருன். III-ம் இராஜராஜனிடம் சிற்றரசனுகத் தொண்டைமண்டலத்தை யாண்டு வந்தான். சோர்வு பார்த்துத் தம்முடி மன்னனேடு சண்டையிடத் தலைப் பட்டான். கி. பி. 1243-ல் சகல புவனசக்கரவர்த்திகள், அவனியாளப் பிறந்தான் முதலிய பல விருதுகளைச் சூடிக் கொண்டான். இவன் ஆட்சி யாணடு பத்தொன்பதில் ஜயங்கொண்ட சோழவளநாட்டுக் கூடலூரரான் ஒருவனுல் வெண்ணியூர் நாட்டு ஓலையாமங்கலம் என்னும் கிராமம் வாங்கியளிக்கப்பெற்றது. (394, 395 of 18) தானும் திருத்தோணிபுரமுடைய நாயகர்க்கு நிலம் விட்டான். (391 of 18). திருக்கை கோட்டித் திருப்பதிக மோது வார்க்கு இறையிலியாக நிலம் அளித்தான்.

**வீரவிருப்பண்ண உடையார்:**

கி. பி. 377-க்குப்பின் புக்கண அரசர் விஜயநகரம் என்ற பட்டினத்தை யுண்டாக்கினுர். அவருக்குப்பின் அவர் மகன் இரண்டாம் அரிகரன் பட்டம் ஏற்ருன். தென்னுட்டுப் பிரதிநிதியாக வீரவிருப்பண்ண உடை யாரை நியமித்திருந்தான். இவர் சகம் 1315-ல் தில்லை விடங்கநல்லூரில் சிலபட்டர்களுக்கும் சீகாழியிலுள்ள திருநெறிமாளிகை மடத்துக்கும் மடப்புறமாக நிலம் விட்டார். அக்கல்வெட்டு வருமாறு:—

ஸ்வஸ்தி ஸ்ரீமன் மஹா மண்டலீச்வரன் பூருவ தெக்ஷிண பச்சிம உத்திராபதி ஸ்ரீ வீரஹரிஹரராயர் குமாரன் ஸ்ரீ வீரவிருப்பண உடையார் பிருதிவிராச்சியம்

செல்லாநின்ற சகாப்தம் 1315ன் மேல்—துந்துபி வருஷம் மார்க்கசிர சுத்த பஞ்சமி சுக்கில கார்த்திகை மாதம் 20-ம் தேதி, சோழமண்டலத்துக் காவேரிக்கும் கொள்ளி டத்துக்கும் நடுவுப்பட்டபற்று ராஜாதிராஜ வளநாட்டுக் கிழக்கு வடகாலனுதாரத்தி (ல்) தில்லைவிடங்க நல்லூர் அடைப்பின்படி நிலம் 60-வேலிக்கு........நாயனுர் ஆளுடைய பிள்ளையார்க்கு நிலம்......140, மாவும் ஆபஸ்தம்ப சூத்திரத்துகமுகை அருணகிரி சிவற்கு இவ்வூர் நத்தமுள்பட மடப்புறம் நிலம் 20-மா........ இந்த கோத்திரத்து இந்த சூத்திரத்து ராமநாத பட்டற்கு பிரதான தண்டிற்கு கூலிக்கு மா 20, சீகாழி திருநெறி மாளிகை மடத்து முதலியார்க்கு மடப்புறம் மா 20, பாரத்துவாசி திருஞான சம்பந்த பண்டிதற்கு பூதான தண்டிறையிலிருக்கு மா 20, தேவகன்மிகாசியபன் காழிக் கற்பகபட்டற்கு பூதான தண்டிறையிலிருக்கு மா 20, ஆக மா தூயலினுல்......20 இந்நிலம் (இந்நிலம்) இருநூற்று நாற்பதுமாவும் சர்வமான்யமாகச் சந்திராதித்த வரையும் நடத்திக்கொள்ள. இதுக்கு விரோதஞ் செய்தா ருண்டாகில்...... (கல்லிலும்) செம்பிலும் வெட்டிக் கொள்ள இப்படிக்கு தர்ம சாதனப்பட்டயம் குடுத் தமைக்கு (373 of 18).

சகம் 1319-ல் ஈசுவர வருஷம் பங்குனி மாதம் மண்டபத் திருப்பணிக்காகத் தனிப்பட்ட ஒருவன் நிலம் அளித்திருக்கிறன்.

**கிருஷ்ணதேவராயர்.** கி. பி. 1509.

இவர் விஜயநகரத்தரசர். பெருவீரர். 'வீரப்ரதாப கிருஷ்ணதேவமகாராய' என்று சிறப்பிக்கப்படுகிறுர்.

மனைப்பகுதியாக ஆண்டுதோறும் பத்துப்பொன் கோயிலுக்கு, வாடகை கட்டிவர உத்தர விட்டிருக்கிறார்.

**வேங்கடதேவராயர் :** கி. பி. 1613.

இவர் சகம் 1520ல் ஆபதுத்தாரணர் அபிஷேகத்திற்காக நிலம் அளித்திருக்கிறார்.

**பிறகல்வெட்டுக்கள் :**

கோடல் வசவன நாயக்கன் மகன் இராமப்ப நாயக்கன் நிலம் விட்ட செய்தியை அறிவிப்பது. (399 of 18). இன்னாரது என்றறியமுடியாத கல்வெட்டுக்கள் பல உள்ளன. அவற்றில் 369 of 18கல்வெட்டு, திருவாலி என்னும் மும்முடிச்சோழ சதுர்வேதிமங்கலத்து நிலம்விட்ட செய்தி குறிப்பிடுகிறது. 310 of 18 என்ற கல்வெட்டு, சகம் 1313-ல் பிரஜாபதி ஆண்டு மகர மாதம் திருதிகை வெள்ளி சதயநாள் திருஞானசம்பந்தர் மடத்திற்கு நிலம் விட்ட செய்தியை அறிவிக்கிறது.

371 of 18 என்ற கல்வெட்டு, சகம் 1300ல் நிலம் விட்ட செய்தியையும், 372 of 18 என்ற கல்வெட்டு சித்தார்த்தி ஆண்டு துலா மாதம் செவ்வாய்க்கிழமை தேவதானமாக நிலம்விட்ட செய்தியையும் அறிவிக்கிறது.

384 of 18 ஆளுடைய பிள்ளையார் பூசைக்காக நிலம் விட்டதையும், 385 of 18 கல்வெட்டு ஆரனூர் இணைச்சியப்ப அகர வல்லபன் மூன்று தூண்களை அளித்த செய்தியையும், 386 of 18 ஆளுடையபிள்ளையார் கோயில் திருப்பணிக்காகவும், நந்தவனப்புறமாகவும், நிலம் விட்ட செய்தியையும் அறிவிக்கின்றன.

396 of 18 கல்வெட்டு, சகம் 1410ல் கோணேரி தேவமகாராஜா என்பவர் சீகாழிக் கோயிலுக்கு நிலம் விட்டார் என்பதை அறிவிக்கிறது. இவர் யார் என்பது அறியச் சான்று ஒன்றும் இல்லை.

401 of 18 கல்வெட்டில் விட்டலதேவமகாராஜா முதலிய விருதுகள் குறிக்கப்படுகின்றன. இவ்விருதுகள் மேலைச்சளுக்கிய மன்னர்களது கவிகளிலும் காணப்படுமாதலால், சிதைந்த இக்கல்வெட்டு அவர்களுடையதாக இருக்கலாமோ என்று ஐயப்பட இடமுண்டு.

இத்தலத்தில் பாண்டியரைப்பற்றியதான கல்வெட்டுக்கள் ஒன்றும் இல்லாமலிருப்பது குறிப் பிடத்தக்கது.

## 10. நித்தியபூஜைகளும் திருவிழாக்களும்

இவ்வாலயத்தில் தினந்தோறும் (காமிக, காரண, வாதுள, மிருகேந்திர ஆகமவிதிப்படி) ஆறுகால பூஜைகள் நடைபெறுகின்றன. சித்திரை மாதத்தில் பிரமோற்சவம் நடைபெறுகிறது. இதில் இரண்டாந்திருவிழா திருமுலைப் பால் உற்சவம் மிகமுக்கியமானது. அன்று ஆளுடைய பிள்ளையாருக்கு மலைமேல் விளங்கும் பெரியநாயகியம்மையார் ஞானப்பால் ஊட்டிக் காட்சிகொடுத்த ஐதிகம் நடைபெறுகிறது. திரளானமக்கள் இக்காட்சியைக் கண்டு ஞானசம்பந்தருக்கு நிவேதித்த ஞானப்பாலை உண்டு மறுமுலைப்பாலுண்ணுப் பேறுபெறுகின்றார்கள். "திருமுலைப்பா லுண்டார் மறுமுலைப்பால் உண்ணார்" என்பது ஆன்றோர்வாக்கு.

ஸ்ரீ திருநிலைநாயகிக்கு ஆடிப்பூர உற்சவமும், நவ ராத்திரி உற்சவமும் நடைபெறுகின்றன.

மலைமேல் விளங்கும் பெரியநாயகருக்கு நாடோறும் நான்குகால பூஜைகளன்றிச் சித்திரை, ஆடி. ஐப்பசி, தைமாதப் பிறப்புக்களிலும், சித்திரைத் திருவாதிரையிலும் கார்த்திகைமாதக் கார்த்திகையிலும், மார்கழித் திருவா திரையிலும், மாசிமாதச் சிவராத்திரியிலும் புழுகும், பெரிய நாயகியாருக்குக் கலவைச்சாந்தும் சாத்தி விசேஷ ஆரா தனையும் நடைபெறுகிறது. ஆண்டுக்கொருமுறைதான் (திருமுலைப்பால் உற்சவத்தன்று) இப்பெருமான் வீதி உலாவிற்கு எழுந்தருளுவார்.

சட்டைநாதருக்குச் சுக்கிரவாரத்தன்று நள்ளிரவில் பூஜை நடத்தப்படுகின்றது. இவருக்குப் புனுகுசட்டம் சாத்தி, மகாநைவேத்திய மில்லாமல் வடை, பாயஸம் நிவேதிப்பது வழக்கம். அன்று அங்குத் தரிசனத்திற்குப் போவார்களும் ஸ்நானம் செய்து ஆசார சீலர்களாகத்தான் போவார்கள். இவருக்காக உட்பிராகாரத்திலுள்ள பலி பீடத்திற்குத்தான் நித்தியபூஜை (நாடோறும் அபிஷேக ஆராதனை) நடந்துவருகிறது.

திருஞானசம்பந்த சுவாமிகளுக்கும் நித்திய பூஜை யோடு தை அமாவாசை, வைகாசி மூலம், ஆனி ரோகணி, ஐப்பசி, சதயம் முதலிய விசேஷ நாட்களிலும் சிறப்பாக அபிஷேக ஆராதனைகள் நடந்துவருகின்றன.

## 11. சுற்றுக்கோயில்கள்

காளிபுரீசுவரர் கோயிலும், தருமதேவதை பூசித்த ஒரு கோயிலும் உள்ளன.

இந்நகர எல்லைக்குள் ஆதீன நிர்வாகத்திற்குட்பட்டுக் குமரகோயில், பதினெண்புராணேசுவரர் கோயில், அக்கினீசுவரர்கோயில், சோளேசுவர முடையார்கோயில் அண்டர்நாயகர்கோயில், சில பிள்ளையார்கோயில்கள், ஐயனார், பிடாரி முதலிய கிராமதேவதைகளின் கோயில் கள் ஆகிய இவைகள் இருக்கின்றன.

## 12. மண்டபங்கள்

சுவாமி சந்நிதியில் ஆஸ்தானமண்டபமும், தெற்கு வெளிப்பிராகாரத்தில் அஷ்டபயிரவருக்கும் யோகஸ் தானமாய் விளங்கிவருகிற வலம்புரிமண்டபமும் இருக் கின்றன.

## 13. சொத்துக்கள்

இத்தேவஸ்தானத்துக்கு நன்செயில் சுமார் 1400 ஏக்கரும், புன்செயில் 300 ஏக்கரும் இருக்கின்றன. சக்காரிலிருந்து ரூ. 2479 வரை கிஸ்தியில் உதவித் தொகையளிக்கப்படுகிறது. தேவஸ்தானத்துக்குச் சொந்த மான வீடு ஒன்றும் இருக்கிறது.

இத்தேவஸ்தானத்திற்கு வெள்ளி இடபங்கள் மூன்றும், வெள்ளிப்பல்லக்கு ஒன்றும், மஞ்சம் ஒன்றும், சில எடு பிடிகளும் உள்ளன. இவைகளின் மதிப்பு சுமார் ரூ. 15000, இரு காசுமாலைகள் உள்ளன. வெள்ளிப் பல்லக்குக்கு வெள்ளிக் குஞ்சங்கள் செய்யப்பட்டிருக் கின்றன. யானை ஒன்று வைத்துப் பராமரிக்கப்பட்டு வருகிறது.

**திருவாபரணம் :**

சுவாமி, அம்பிகை (மூலஸ்தானம்) கெட்டிருந்தவை களை அழித்துப் புதுப்பிக்கப்பட்டிருக்கிறது. திரிபுரசுந்தரி அம்பாளுக்கு தாடங்கம் செய்துவைக்கப்பட்டிருக்கிறது. திருஞானசம்பந்தருக்குத் தங்கத்தில் பால் கிண்ணம் ஒன்று திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்து உபயமாக வந்திருக்கிறது. திருஞானசம்பந்தருக்கு வெள்ளி மஞ்சம் செய்திருக்கிறது. பள்ளியறை மஞ்சம் கண்ணுடிவேலை செய்து வைக்கப்பட்டிருக்கின்றது. காசுமாலை ஒன்று, மாங்காய்மாலை இரண்டு வாங்கப்பட்டிருக்கின்றன.

## 14. திருப்பணி

பிரமதீர்த்தம் வண்டல்படிந்து நீர் அடிக்கடி கெட்டுப் போய்க் கொண்டிருந்ததால் இயந்திரங்களைக் கொண்டு நீரிறைத்து வண்டலள்ளித் தூய்மையாக்கப் பட்டிருக் கின்றது. ஒரு காரியாலயமும், களஞ்சிய அறையும் கட்டப்பட்டிருக்கின்றன். சுவாமிகோயில் வடக்குத் திருமதில் கிலமாக இருந்ததால் இடித்துக் கட்டப்பட்டது. சுவாமி சந்நிதிக்கெதிரே பிடாரிகோயிலும் கீழவீதியிலிருந்த விநாயகர் ஆலயமும் பூரா இடித்தெடுத்துக் கட்டிக் கும்பாபிஷேகம் செய்விக்கப்பட்டது. சுவாமிகோயில் முன் மண்டபம் சீர்திருத்திக் கருங்கல்தளவரிசை செய்யப் பட்டிருக்கிறது. தெற்குத் திருமாளிகைப் பத்தியில் கருங்கல் தளவரிசை போடப்பட்டிருக்கின்றது. மேலைத் திருமதில் மேலைக்கோபுரத்திற்கு வடபுறமுள்ளதும் வடக்குத் திருமதில் வடக்குக்கோபுரத்திற்கு மேல்பா லுள்ளதும் முழுவதும் பிரித்துக் கருங்கல் வரிவிட்டுக்

கட்டப்பட்டிருக்கிறது. சுவாமிகோயிலில் மலைப்பிராகாரத்திலிருந்து மலைக்குப் போகும் வழியில் வழிதிறந்து சுவர் எழுப்பிக் கதவு நிலைகள் வைத்துக் கட்டப்பட்டது. சுவாமி கோவில் மண்டபங்கள், திருமாளிகைப்பத்தி மண்டபங்கள் முதலியன பூராவும் பெருஞ்செலவில் பழுதுபார்க்கப் பட்டிருக்கின்றன.

கயிலாசவாகனம், ஆட்டுக்கிடாவாகனம், சூரன் ஆகிய இம்மூன்று மரவாகனங்களும் புதிதாகச் செய்யப்பட்டிருக்கின்றன. தேர்வடங்கள் நான்கு தயாரிக்கப்பட்டிருக்கின்றன. தெற்குவீதியில் விருந்தினர்விடுதி கட்டப்பட்டது. சுவாமிகோயில் மகா மண்டபத்தில் அடைப்புச்சுவர்கள் எடுத்து இருப்பு வாசலமைத்து உற்சவ மூர்த்திகளுக்குப் பாதுகாப்புச் செய்யப்பட்டது. அர்த்தமண்டபம் மகாமண்டபம் கருங்கல் தளவரிசை போடப்பட்டது. உற்சவ சம்பந்தமூர்த்திக்குப் புதிய முறையில் சந்நிதியமைத்து ஐதீகச் சித்திரங்கள் எழுதுவித்துக் கும்பாபிஷேகமும் செய்யப்பட்டது. சுவாமி கோயில் பள்ளி அறை புதிதாகவே கட்டப்பட்டது. கோபுரக்கதவுகள் வர்ணம் தீட்டப்பட்டன. அம்மன் கோயில் திருமாளிகைப்பத்தி பழுது பார்க்கப்பட்டது. ஆஸ்தானமண்டபம் முன்புறமண்டபம் உயர்த்தப்பட்டது. சோமாஸ்கந்தர்சந்நிதி முன்புறம் தெற்குமேற்குப்பிராகாரம் உயர்த்திச் சிமிண்டு பூசப்பட்டது. கீழக்கோபுரம் சுவாமி கோயில் கட்டைக்கோபுரம் இரண்டும் தளவரிசை உயர்த்திப்போடப்பட்டது. யானைக் கொட்டகை கட்டப்பட்டது.

ஸ்ரீ பைரவர் ஆலயம் ஜீர்ணோத்தாரணம் செய்து கும்பாபிஷேகம் நடத்தப்பட்டது. புறக்கோயில்கள் பழுதுபார்க்கப்பட்டன. அக்னிபுரீசுவரர்கோயில் பழுது

பார்த்து வர்ணம் தீட்டிக் கும்பாபிஷேகம் நடத்தப் பெற்றது. அண்டநாதர்கோயிலும் அப்படியே. சட்ட நாதன்குளத்தை நன்முக வெட்டிப் பயன்படச் செய்யப் பட்டது. அய்யனுர்குளம்வெட்ட உதவி நிதியளிக்கப் பட்டது.

## 15 சமயப்பணி

தேவஸ்தானம் பிரசாரசபா மண்டபத்தில் முக்கிய மாகச் சித்திரைத் திருவிழாவிலும், நவராத்திரி, கந்தசஷ்டி போன்ற இதர விழாக்காலங்களிலும் புலவர்களைக் கொண்டு சொற்பொழிவுகள் நடத்தப்பெற்றுவருகின்றன. யாத்ரீகர்கள் தலச் சிறப்பினை அறிந்து வழிபடுதற்காக உரைநடையில் தலச் சிறப்பும் அச்சிட்டு வழங்கப்பெறு கின்றது. சமயாசாரியர்கள் பாடியருளிய திருப்பதிகங்கள் இத்தலத்திற்கே நிறைய இருப்பதால், பாராயணம் செய்ப வர்களுக்கு வசதியாக – கையடக்கப் பதிப்பாக அவை களைத் தனியே அச்சிட்டுக் கொடுக்கப்படுகிறது. திரு ஞானசம்பந்தப்பிள்ளையார் திருவவதாரஞ் செய்தருளிச் சிவஞானப்பாலருந்தி, சிவஞானசம்பந்தரான தலம் இது வாதலின், பெரியபுராணத்திலுள்ள திருஞானசம்பந்த சுவாமிகள் புராணத்தில் ஞானப்பாலுண்டருளியதுவரை யிலுள்ள பகுதி (முதற் நூறு பாடல்களும்) கோவை, உயர்திரு. C. K. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் எழுதிய விரிவுரையுடன் வெளியிடப்பட்டிருக்கின்றது.

இளைஞர்களுக்குத் தேவாரப் பயிற்சி அளித்தற் பொருட்டு 24—6—49 ல் இலவசத் தேவாரவகுப்பு தொடங்கப்பெற்று நடந்துவருகின்றது. தக்க ஆசிரியர் நியமனஞ் செய்யப்பெற்றிருக்கின்ருர். வகுப்பில் சேர்ந்து

படிக்கும் மாணவர்களுக்கு அவரவர்கள் பயிலும் பள்ளிக்கூட வகுப்புச் சம்பளம் தேவஸ்தானத்திலிருந்தே கொடுத்துதவப்பட்டுவருகிறது. சித்திரைத் திருவிழாவின்போது திருமுறை மாநாடும் நடத்தப்பெற்றுவருகிறது.

## 16 நிர்வாகம்

தருமபுர ஆதீன பரிபாலனத்திற்குட்பட்ட தேவஸ்தானங்களுள் இதுவும் ஒன்று. ஆதீனகர்த்தரவர்களாக எழுந்தருளியிருக்கும் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் ஆதீனகர்த்தா ஸ்தானத்தை வகிக்க ஆரம்பித்த 1945௵ ஜூன்மீ 20 தேதிமுதல் இவ்வாலயத்தைப் பரிபாலனம் செய்துவருகின்றார்கள்.

## 17 பதிகங்களும் நூல்களும்

திருஞானசம்பந்த சுவாமிகள் திருப்பதிகங்கள் அறுபத்தேழும், திருநாவுக்கரசு சுவாமிகள் திருப்பதிகங்கள் மூன்றும், சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருப்பதிகம் ஒன்றும் ஆக எழுபத்தொரு திருப்பதிகங்கள் இத்தலத்திற்கு உள்ளன. திருவாசகத்திலுள்ள பிடித்தபத்தும் இத்தலத்தில் அருளிச்செய்ததே. ஏனைய திருமுறைகளிலும் திருஞான சம்பந்தரைப்பற்றியும் இத்தலத்தைப்பற்றியும் ஆங்காங்கு சிறப்பிக்கப்பெற்றுள்ளன. மற்றும் இத்தலத்தைப்பற்றியனவாகப் பாடப்பெற்ற நூல்களை, இந்நூலின்கண் எட்டாம் பிரிவாகிய அன்பர்கள் என்ற பகுதியில் படித்து அறியலாம்.



## நால்வர் தோத்திரம்

பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல்போற்றி
ஆழிமிசைக் கல்மிதப்பி லணைந்தபிரா னடிபோற்றி
வாழிதிரு நாவலூர் வன்தொண்டர் பதம்போற்றி
ஊழிமலி திருவாத வூரர்திருத் தாள்போற்றி.

உ

சிவமயம்

# திருப்பாடல்கள்

## திருஞானசம்பந்த சுவாமிகள் திருப்பதிகங்கள்

### பண்—நட்டபாடை

திருச்சிற்றம்பலம்

தோடுடையசெவி யன்விடையேறியோர் தூவெண்மதிசூடிக்
காடுடையசுட லைப்பொடிபூசியென் உள்ளங்கவர்கள்வன்
ஏடுடையமல ரான்முனைநாட்பணிந் தேத்தஅருள்செய்த
பீடுடையபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே. 1

முற்றலாமையிள நாகமோடேன முளைக்கொம்பவைபூண்டு
வற்றலோடுகல னுப்பலிதேர்ந்தென துள்ளங்கவர்கள்வன்
கற்றல்கேட்ட லுடைய யார்பெரியார்கழல் கையால்தொழுதேத்தப்
பெற்றம்ஊர்ந்தபிர மாபுரம்மேவிய பெம்மானிவனன்றே. 2

நீர்பரந்தநிமிர் புன்சடைமேலோர் நிலாவெண்மதிசூடி
ஏர்பரந்தஇன வெள்வளைசோர என் உள்ளங்கவர்கள்வன்
ஊர்பரந்தவுல கின்முதலாகிய ஓரூரிதுவென்னப்
பேர்பரந்தபிர மாபுரம்மேவிய பெம்மானிவனன்றே. 3

விண்மகிழ்ந்தமதி லெய்ததுமன்றி விளங்குதலையோட்டில்
உண்மகிழ்ந்துபலி தேரியவந்தென துள்ளங்கவர்கள்வன்
மண்மகிழ்ந்தஅர வம்மலர்க்கொன்றை மலிந்தவரைமார்பிற்
பெண்மகிழ்ந்தபிர மாபுரம்மேவிய பெம்மானிவன்றே. 4

ஒருமைபெண்மையுடை யன்சடையன்விடை யூரும்இவனென்ன
அருமையாகவுரை செய்யஅமர்ந்தென துள்ளங்கவர்கள்வன்
கருமைபெற் றகடல்கொள்ளமிதந்ததோர் காலம்இதுவென்னப்
பெருமைபெற்றபிர மாபுரம்மேவிய பெம்மானிவனன்றே. 5

மறைகலந்தஒலி பாடலோடாடல ராகிமழுவேந்தி
இறைகலந்தஇன வெள்வளைசோரஎன் உள்ளங்கவர்கள்வன்
கறைகலந்தகடி யார்பொழில்நீடுயர் சோலைக்கதிர்சிந்தப்
பிறைகலந்தபிர மாபுரம்மேவிய பெம்மானிவனன்றே. 6

சடைமுயங்குபுன லன்அனலன்எரி வீசிச்சதிர்வெய்த
உடைமுயங்கும்அர வோடுழிதந்தென துள்ளங்கவர்கள்வன்
கடல்முயங்குகழி சூழ்குளிர்கானலம் பொன்னஞ்சிறகன்னம்
பெடைமுயங்குபிர மாபுரம்மேவிய பெம்மானிவனன்றே. 7

வியரிலங்குவரை யுந்தியதோள்களை வீரம்விளைவித்த
உயரிலங்கையரை யன்வலிசெற்றென துள்ளங்கவர்கள்வன்
துயரிலங்கும்உல கிற்பலஊழிகள்தோன்றும் பொழுதெல்லாம்
பெயரிலங்குபிர மாபுரம்மேவிய பெம்மானிவனன்றே. 8

தாள்நுதல்செய்திறை காணியமாலொடுதண் தாமரையானும்
நீணுதல்செய்தொழி யந்நிமிர்ந்தானென துள்ளங்கவர்கள்வன்
வாள்நுதல்செய்மக ளீர்முதலாகிய வையத்தவரேத்தப்
பேணுதல்செய்பிர மாபுரம்மேவிய பெம்மானிவன்றே. 9

புத்தரோடுபொறி யில்சமணும்புறங் கூறநெறிநில்லா
ஒத்தசொல்லஉல கம்பலிதேர்ந்தென துள்ளங்கவர்கள்வன்
மத்தயானைமறு கவ்வுரிபோர்த்ததோர் மாயம்இதுவென்னப்
பித்தர்போலும்பிர மாபுரம்மேவிய பெம்மானிவனன்றே. 10

அருநெறியமறை வல்லமுனியகன் பொய்கையலர்மேய
பெருநெறியபிர மாபுரம்மேவிய பெம்மானிவன்றன்னை
ஒருநெறியமனம் வைத்துணர்ஞானசம் பந்தன்உரைசெய்த
திருநெறியதமிழ் வல்லவர்தொல்வினை தீர்தல்எளிதாமே. 11

திருச்சிற்றம்பலம்.

## பண்—வியாழக்குறிஞ்சி

# திருவெழுகூற்றிருக்கை

### திருச்சிற்றம்பலம்

ஓருரு வாயினை மானாங் காரத்
தீரியல் பாயொரு விண்முதல் பூதலம்
ஒன்றிய இருசுடர் உம்பர்கள் பிறவும்
படைத்தளித் தழிப்பமும் மூர்த்திக ளாயினை
இருவரோ டொருவ னாகி நின்றனை
ஓரால் நீழல் ஒண்கழல் இரண்டும்
முப்பொழு தேத்திய நால்வர்க் கொளிநெறி
காட்டினை நாட்ட மூன்றாகக் கோட்டினை
இருநதி அரவமோ டொருமதி சூடினை
ஒருதா ளீரயின் மூவிலைச் சூலம்
நாற்கால் மான்மறி ஐந்தலை அரவம்
ஏந்தினை காய்ந்த நால்வாய் மும்மதத்
திருகோட் டொருகரி யீடழித் துரித்தனை
ஒருதனு இருகால் வளையவாங்கி
முப்புரத் தோடு நால்நிலம அஞ்சக்
கொன்று தலத்துற அவுணரை யறுத்தனை
ஐம்புலன் நாலாம் அந்தக்கரணம்
முக்குணம் இருவளி யொருங்கிய வானோர்
ஏத்த நின்றனை யொருங்கிய மனத்தோ
டிருபிறப் போர்ந்து முப்பொழுது குறைமுடித்து
நான்மறை யோதி ஐவகை வேள்வி
அமைத்தா றங்க முதலெழுத் தோதி
வரன்முறை பயின்றெழு வான்றனை வளர்க்கும்
பிரமபுரம் பேணினை
அருபதம் முரலும் வேணுபுரம் விரும்பினை
இகலிய மைந்துணர் புகலி யமர்ந்தனை

பொங்குநாற் கடல்சூழ் வெங்குரு விளங்கினை
பாணிமூ வுலகும் புதையமேல் மிதந்த
தோணிபுரத் துறைந்தனை தொலையா இருநிதி
வாய்ந்த பூந்தராய் ஏய்ந்தனை
வரபுரம் என்றுணர் சிரபுரத் துறைந்தனை
ஒருமலை யெடுத்த இருதிறல் அரக்கன்
விறல்கெடுத் தருளினை புறவம் புரிந்தனை
முந்நீர்த் துயின்றோன் நான்முகன் அறியாப்
பண்பொடு நின்றனை சண்பை யமாந்தனை
ஐயுறும் அமணரும் அருவகைத் தேரரும்
ஊழியும் உணராக் காழி யமர்ந்தனை
எச்சனே ழிசையோன் கொச்சையை மெச்சினை
ஆறு பதமும் ஐந்தமர் கல்வியும்
மறைமுதல் நான்கும்
மூன்று காலமுந் தோன்ற நின்றனை
இருமையின் ஒருமையும் ஒருமையின் பெருமையும்
மறுவிலா மறையோர்
கழுமல முதுபதிக் கவுணியன் கட்டுரை
கழுமல முதுபதிக் கவுணியன் அறியும்
அனைய தன்மையை யாதலின் நின்னை
நினைய வல்லவ ரில்லைநீள் நிலத்தே.

திருச்சிற்றம்பலம்.

திருச்சிற்றம்பலம்

எம்பிரா னெனக்கமுத மாவானும் தன்னடைந்தார்
தம்பிரா னாவானும் தழலேந்து கையானும்
கம்பமா கரியுரித்த காபாலி கறைக்கண்டன்
வம்புலாம் பொழிற்பிரம புரத்துறையும் வானவனே.

தன்னடைந்தார்க் கின்பங்க டருவானைத் தத்துவனைக்
கன்னடைந்த மதிற்பிரம புரத்துறையுங் காவலனை
முன்னடைந்தான் சம்பந்தன் மொழிபத்து மிவைவல்லார்
பொன்னடைந்தார் போகங்கள்பலவடைத்தார் புண்ணியரே

வண்டார்குழ லரிவையொடு பிரியாவகைபாகம்
பெண்டான்மிக வானன்பிறைச் சென்னிப்பெருமானூர்
தண்டாமரை மலராளுறை தவளந்நெடுமாடம்
விண்டாங்குவ போலும்மிகு வேணுபுரமதுவே.

வண்டரங்கப் புனற்கமல மதுமாந்திப் பெடையினொடும்
ஒண்டரங்க இசைபாடு மளியரசே யொளிமதியத்
துண்டரங்கப் பூண்மார்பர் திருத்தோணி புரத்துறையும்
பண்டரங்கர்க் கென்னிலைமை பரிந்தொருகாற் பகராயே.

சிறையாரு மடக்கிளியே யிங்கேவா தேனோடுபால்
முறையாலே யுணத்தருவன் மொய்பவளத் தொடுதரளந்
துறையாருங் கடற்றோணி புரத்தீசன் றுளங்குமிளம்
பிறையாளன் திருநாம மெனக்கொருகாற் பேசாயே.

உரவார்கலையின் கவிதைப்புலவர்க் கொருநாளுங்
கரவாவண்கைக் கற்றவர்சேருங் கலிக்காழி
அரவாரரையா அவுணர்புரமூன் றெரிசெய்த
சரவாவென்பார் தத்துவஞானத் தலையாரே.

போதையார் பொற்கிண்ணத் தடிசில்பொல் லாதெனத்
தாதையார் முனிவுறத் தானெனை யாண்டவன்
காதையார் குழையினன் கழுமல வளநகர்ப்
பேதையா ளவளொடும் பெருந்தகை யிருந்ததே.

திருச்சிற்றம்பலம்.

# திருநாவுக்கரசு சுவாமிகள் திருப்பதிகம்

## திருவிருத்தம்

திருச்சிற்றம்பலம்

பார்கொண்டு மூடிக் கடல்கொண்ட ஞான்றுநின் பாதமெல்லாம்
நாலஞ்சு புள்ளினம் ஏந்தின என்பர் நளிர்மதியம்
கால்கொண்ட வண்கைச் சடைவிரித் தாடுங் கழுமலவர்க்
காளன்றி மற்றுமுண் டோஅந்த ஞான்று அகலிடமே. 1

கடையார் கொடிநெடு மாடங்கள் எங்குங் கலந்திலங்க
உடையான் உடைதலை மாலையுஞ் சூடி உகந்தருளி
விடைதா னுடைய அவ் வேதியன் வாழுங் கழுமலத்துள்
அடைவார் வினைக ளவைஎள்க நாள்தொறும் ஆடுவரே. 2

திரைவாய்ப் பெருங்கடல் முத்தங் குவிப்ப முகந்துகொண்டு
நுரைவாய் நுளைச்சிய ரோடிக் கழுமலத் துள்ளழுந்து
விரைவாய் நறுமலர் சூடிய விண்ணவன தன்னடிக்கே
வரையாப் பரிசிவை நாடொறும நந்தமை ஆள்வனவே. 3

விரிக்கும் அரும்பதம் வேதங்கள் ஓதும் விழுமியநூல்
உரைக்கில் அரும்பொருள் உள்ளுவர்கேட்கில் உலகமுற்றும்
இரிக்கும் பறையொடு பூதங்கள் பாடக் கழுமலவன்
நிருத்தம் பழம்படி யாடுங் கழல்நம் மை ஆள்வனவே. 4

சிந்தித் தெழுமன மேநினை யாமுன் கழுமலத்தைப்
பந்தித்த வல்வினை தீர்க்கவல லானைப் பசுபதியைச்
சந்தித்த கால மறுத்துமென் றெண்ணி யிருந்தவர்க்கு
முந்தித் தொழுகழல் நாடொறும் நந்தமை ஆள்வனவே. 5

நிலையும் பெருமையும் நீதியுஞ் சால அழகுடைத்தாய்
அலையும் பெருவெள்ளத் தன்று மிதந்தஇத் தோணிபுரம்
சிலையில் திரிபுரம் மூன்றெரித் தார்தங் கழுமலவர்
அலருங் கழலடி நாள்தொறும் நந்தமை ஆள்வனவே. 6

முற்றிக் கிடந்து முந்நீரின் மிதந்துடன் மொய்த்தமரர்
சுற்றிக் கிடந்து தொழப்படு கின்றது சூழரவம்
தெற்றிக்கிடந்துவெங்கொன்றைளந்துன்றிவெண்திங்கள்சூடும்
கற்றைச்சடைமுடி யார்க்கிட மாய கழுமலமே. 7

உடலும் உயிரும் ஒருவழிச் செல்லுமுல கத்துள்ளே
அடையும் உனைவந் தடைந்தார் அமரர் அடியிணைக்கீழ்
நடையும் விழவொடு நாடொறும் மல்குங் கழுமலத்துள்
விடையன் தனிப்பதம் நாடொறும் நந்தமை ஆள்வனவே. 8

பரவைக் கடல்நஞ்ச முண்டது மில்லையிப் பார்முழுவதும்
நிரவிக் கிடந்து தொழப்படு கின்றது நீண்டிருவர்
சிரமப்படவந்து சார்ந்தார் கழலடி காண்பதற்கே
அரவக் கழலடி நாடொறும் நந்தமை ஆள்வனவே. 9

கரையார் கடல்சூழ் இலங்கையர் கோன்றன் முடிசிதறத்
தொலையா மலரடி ஊன்றலும் உள்ளம் விதிர்விதிர்த்துத்
தலையாய்க் கிடந்துயர்ந் தான்றன் கழுமலங் காண்பதற்கே
அலையாப் பரிசிவை நாடொறும் நந்தமை ஆள்வனவே. 10

திருச்சிற்றம்பலம்

# சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருப்பதிகம்

## பண் — தக்கேசி

### திருச்சிற்றம்பலம்

சாதலும் பிறத்தலுந் தவிர்த்தெனை வகுத்துத்
தன்னருள் தந்தவெந் தலைவனை மலையின்
மாதினை மதித்தங்கொர் பால்கொண்ட மணியை
வருபுனல் சடையிடை வைத்தவெம் மானை
ஏதிலென் மனத்துக் கோரிரும் புண்டநீரை
எண்வகை யொருவனை யெங்கள் பிரானைக்
காதில்வெண் குழையனைக் கடல்கொள மிதந்த
கழுமல வளநகர்க் கண்டுகொண்டேனே. 1

மற்றொரு துணையினி மறுமைக்குங் காணேன்
வருந்தலுற் றேன்மற வாவரம் பெற்றேன்
சுற்றிய சுற்றமுந் துணையென்று கருதேன்
துணையென்று நான்தொழப் பட்டவொண் சுடரை
முத்தியும் ஞானமும் வானவ ரறியா
முறைமுறை பலபல நெறிகளுங் காட்டிக்
கற்பனை கற்பித்த கடவுளை யடியேன்
கழுமல வளநகர்க் கண்டுகொண் டேனே. 2

திருத்தினை நகருறை சேந்தனப் பனென்
செய்வினை யறுத்திடுஞ் செம்பொனை யம்பொன்
ஒருத்தனை யல்லதிங் காரையு முணரேன்
உணர்வுபெற் றேனுய்யுங் காரணந் தன்னால்
விருத்தனைப் பாலனைக் கனவிடை விரவி
விழித்தெங்குங் காணமாட் டாதுவிட் டிருந்தேன்
கருத்தனை நிருத்தஞ்செய் காலனை வேலைக்
கழுமல வளநகர்க் கண்டுகொண் டேனே 3

மழைக்கரும் பும்மலர்க் கொன்றையி னானை
வளைக்கலுற் றேன்மற வாமனம் பெற்றேன்
பிழைத்தொரு காலினிப் போய்ப்பிற வாமைப்
பெருமைபெற் றேன்பெற்ற தாரபெறு கிற்பார்
குழைக்கருங் கண்டனைக் கண்டுகொள் வானே
பாடுகின்றேன் சென்று கூடவும் வல்லேன்
கழைக்கரும் புங்கத லிப்பல சோலைக்
கழுமல வளநகர்க் கண்டுகொண் டேனே. 4

குண்டலங் குழைதிகழ் காதனே யென்றுங்
கொடுமழு வாட்படைக் குழகனே யென்றும்
வண்டலம் பும்மலர்க் கொன்றைய னென்றும்
வாய்வெரு வித்தொழு தேன்விதி யாலே
பண்டைநம் பலமன முங்களைந் தொன்றாய்ப்
பசுபதி பதிவின விப்பல நாளுங்
கண்டலங் கழிக்கரை யோதம்வந் துலவுங்
கழுமல வளநகர்க் கண்டுகொண் டேனே. 5

வரும்பெரும் வல்வினை யென்றிருந் தெண்ணி
வருந்தலுற் றேன்மற வாமனம் பெற்றேன்
விரும்பியென் மனத்திடை மெய்குளிர்ப் பெய்தி
வேண்டிநின் றேன்தொழு தேன்விதி யாலே
அரும்பினை யலரினை யமுதினைத் தேனை
யையனை யறவனென் பிறவிவே ரறுக்குங்
கரும்பினைப் பெருஞ்செந்நெல் நெருங்கிய கழனிக்
கழுமல வளநகர்க் கண்டுகொண் டேனே. 6

அமலவர் பரவவும் அடியவர் தொழவும்
அன்பர்கள் சாயலு ளடையலுற் றிருந்தேன்
முயல்பவர் பின்சென்று முயல்வலை யானை
படுமென மொழிந்தவர் வழிமுழு தெண்ணிப்

புயலினைத் திருவினைப் பொன்னின தொளியை
    மின்னின துருவை யென்னிடைப் பொருளைக்
கயலினஞ் சேலொடு வயல்விளை யாடுங்
    கழுமல வளநகர்க் கண்டுகொண் டேனே. 7

நினைதரு பாவங்கள் நாசங்க ளாக
    நினைந்துமுன் தொழுதெழப் பட்டவொண் சுடரை
மலைதரு மலைமகள் கணவனை வானோர்
    மாமணி மாணிக்கத் தைமறைப் பொருளைப்
புனைதரு புகழினை யெங்கள தொளியை
    இருவரு மொருவனென் றுணர்வரி யவனைக்
கனைதரு கருங்கட லோதங்வம் துலவுங்
    கழுமல வளநகர்க் கண்டுகொண்டேனே. 8

மறையிடைத் துணிந்தவர் மனையிடை யிருப்ப
    வஞ்சனை செய்தவர் பொய்கையு மாயத்
துறையுறக் குளித்துள தாகவைத் துய்த்த
    உண்மையெ னுந்தக வின்மையை யோரேன்
பிறையுடைச் சடையனை யெங்கள் பிரானைப்
    பேரரு ளாளனைக் காரிருள் போன்ற
கறையணி மிடறுடை யடிகளை யடியேன்
    கழுமல வளநகர்க் கண்டுகொண் டேனே. 9

செழுமலர்க் கொன்றையுங் கூவிள மலரும்
    விரவிய சடைமுடி யடிகளை நினைந்திட்
டழுமலர்க் கண்ணிணை யடியவர்க் கல்லால்
    அறிவரி தவன்றிரு வடியிணை யிரண்டுங்
கழுமல வளநகர்க் கண்டுகொண் டூரன்
    சடையன்றன் காதலன் பாடிய பத்துந்
தொழுமல ரெடுத்தகை யடியவர் தம்மைத்
    துன்பமும் இடும்மையுஞ் சூழகி லாவே. 10

திருச்சிற்றம்பலம்.

# மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச்செய்த

## பிடித்தபத்து

திருச்சிற்றம்பலம்

உம்பர்கட் கரசே ஒழிவற நிறைந்த
யோகமே ஊற்றையேன் றனக்கு
வம்பெனப் பழுத்தென் குடிமுழு தாண்டு
வாழ்வற வாழ்வித்த மருந்தே
செம்பொருட் டுணிவே சீருடைக் கழலே
செல்வமே சிவபெரு மானே
எம்பொருட் டுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே. 1

விடைவிடா துகந்த விண்ணவர் கோவே
வினையனே னுடையமெய்ப் பொருளே
முடைவிடா தடியேன் மூத்தற மண்ணாய்
முழுப்புழுக் குரம்பையிற் கிடந்து
கடைபடா வண்ணங் காத்தெனை யாண்ட
கடவுளே கருணைமா கடலே
இடைவிடா துன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே. 2

அம்மையே யப்பா வொப்பிலா மணியே
அன்பினில் விளைந்தவா ரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் றனக்குச்
செம்மையே யாய சிவபத மளித்த
செல்வமே சிவபெரு மானே
இம்மையே யுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே. 3

அருளுடைச் சுடரே யளிந்ததோர் கனியே
பெருந்திற லருந்தவர்க் கரசே
பொருளுடைக் கலையே புகழ்ச்சியைக் கடந்த
போகமே யோகத்தின் பொலிவே
தெருளிடத் தடியார் சிந்தையுட் புகுந்த
செல்வமே சிவபெருமானே
இருளிடத் துன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே. 4

ஒப்புனக் கில்லா வொருவனே யடியேன்
உள்ளத்து ளொளிர்கின்ற வொளியே
மெய்ப்பத மறியா வீறிலி யேற்கு
விழுமிய தளித்ததோ ரன்பே
செப்புதற் கரிய செழுஞ்சுடர் மூர்த்தீ
செல்வமே சிவபெரு மானே
எய்ப்பிடத் துன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே. 5

அறவையேன் மனமே கோயிலாக் கொண்டாண்
டளவிலா ஆனந்த மருளிப்
பிறவிவே ரறுத்தென் குடிமுழு தாண்ட
பிஞ்ஞகா பெரியவெம் பொருளே
திறவிலே கண்ட காட்சியே யடியேன்
செல்வமே சிவபெரு மானே
இறவிலே யுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே. 6

பாசவே ரறுக்கும் பழம்பொருள் தன்னைப்
பற்றுமா றடியனேற் கருளிப்
பூசனை யுகந்தென் சிந்தையுட் புகுந்து
பூங்கழல் காட்டிய பொருளே

தேசுடை விளக்கே செழுஞ்சுடர் மூர்த்தீ
செல்வமே சிவபெரு மானே
ஈசனே யுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே 7

அத்தனே யண்ட ரண்டமாய் நின்ற
ஆதியே யாதுமீ றில்லாச்
சித்தனே பத்தர் சிக்கெனப் பிடித்த
செல்வமே சிவபெரு மானே
பித்தனே யெல்லா வுயிருமாய்த் தழைத்துப்
பிழைத்தவை யல்லையாய் நிற்கும்
எத்தனே யுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே. 8

பால்நினைந் தூட்டுந் தாயினுஞ் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை யுருக்கி யுள்ளொளி பெருக்கி
யுலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே. 9

புன்புலால் யாக்கை புரைபுரை கனியப்
பொன்னெடுங் கோயிலாப் புகுந்தென்
என்பெலா முருக்கி யெளியையா யாண்ட
ஈசனே மாசிலா மணியே
துன்பமே பிறப்பே யிறப்பொடு மயக்காந்
தொடக்கெலா மறுத்தநற் சோதீ
இன்பமே யுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே. 10

திருச்சிற்றம்பலம்.

## திருவிசைப்பா

எம்பந்த வல்வினைநோய் தீர்த்திட் டெமையாளுஞ்
சம்பந்தன் காழியர்கோன் றன்னையுமாட் கொண்டருளி
அம்புந்து கண்ணாளுந் தானு மணிதில்லைச்
செம்பொன்செ யம்பலமே சேர்ந்திருக்கை யாயிற்றே.

—பூந்துருத்தி நம்பிகாடநம்பிகள்.

## திருக்கழுமல மும்மணிக்கோவை

* * * *

தாதையொ டுவந்த வேதியச் சிறுவன்
தளர்நடைப் பருவத்து வளர்பசி வருத்த
அன்னா யோவென் றழைப்பமுன் நின்று
ஞான போனகத் தருளட்டிக் குழைத்த
ஆனாத் திரளை யவன்வயின் அருள
அந்தணன் முனிந்து தந்தார் யாரென
அவனைக் காட்டுவன் அப்ப வாநீர்
தோஓ டுடைய செவியன் என்றும்
பீடுடைய பெம்மான் என்றுங்
கையிற் சுட்டிக் காட்ட
ஐயநீ வெளிப்பட் டருளினை ஆங்கே.

போதும் பெறுவிடிற் பச்சிலை யுண்டு புனலுண்டெங்கும்
ஏதும் பெறுவிடில் நெஞ்சுண்டன் றேயிணை யாகச்செப்புஞ்
சூதும் பெறுமுலைப் பங்கர்தென் தோணிபு ரேசர்வண்டின்
தாதும் பெறுத அடித்தா மரைசென்று சார்வதற்கே.

—பட்டினத்தடிகள்.

## திருமும்மணிக்கோவை

என்றும் அடியவர் உள்ளத் திருப்பன இவ்வுலகோர்
நன்று மலர்கொடு தூவித் துதிப்பன நல்லசங்கத்
தோன்றும் புலவர்கள் யாப்புக் குரியன ஒண்கலியைப்
பொன்றுங் கவுணியன் சைவ சிகாமணி பொன்னடியே.

பிறவிஎனும் சொல்லாப் பெருங்கடலை நீத்தத்
துறவியெனுந் தோற்றோணி கண்டீர்—நிறையுலகில்
பொன்மாலை மார்பன் புனற்காழிச் சம்பந்தன்
தன்மாலை ஞானத் தமிழ்.

## திருக்கலம்பகம்

போற்று வார்இடர் பாற்றிய புனிதன்
பொழில்சு லாவிய புகலியர் பெருமான்
ஏற்ற வார்புகழ் ஞானசம் பந்தன்
எம்பி ரான்இருஞ் சுருதியங் கிரிவாய்ச்
சேற்று வார்புனங் காவல் புரிந்தென்
சிந்தை கொள்வதுஞ் செய்தொழி லானுன்
மாற்றம் நீரெமக் கின்றுரை செய்தால்
வாசி யோகுற மாது நலீரே.

—நம்பியாண்டார்நம்பிகள்.

## பெரியபுராணம்

பிரமபுரம் வேணுபுரம் பெரும்புகலி வெங்குருநீர்ப்
பொருவிறிருத் தோணிபுரம் பூந்தராய் சிரபுரமுன்
வருபுறவஞ் சண்பைநகர் வளர்காழி கொச்சைவயம்
பரவுதிருக் கழுமலமாம் பன்னிரண்டு திருப்பெயர்த்தால்.

கடையுகத்திற் றனிவெள்ளம் பலவிரிக்குங் கருப்பம்போன்
றிடையருப் பெருந்தீர்த்த மெவற்றினுக்கும் பிறப்பிடமாய்
விடையுயர்த்தார் திருத்தோணிப் பற்றுவிடா மேன்மையதாந்
தடமதனிற் றுறையணைந்தார் தருமத்தின் றலைநின்றார்

— சேக்கிழாரடிகள்.

திருவாவடுதுறை ஆதீனம் எட்டாவது மகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக சுவாமிகள்

இயற்றியருளிய


# திருஞானசம்பந்தர் பிள்ளைத்தமிழ்

கோலொன்று கொண்டகில வலயம் புரக்கவரு
கோமாறன் மேவிய தமிழ்க்
கூடலிற் சமணமூகர் திருமடத் திட்டஎரி
கொற்றவர் பற்ற மொழியா
மாலொன்று மங்கையர்க் கரசியார் படுதுயரின்
வலிகண்டு சென்று தவிர
வஞ்சப் பெருங்கூனும் வெப்புந் தவிர்த்தருளு
மதுரவா சகமதகு பாய்
காலொன்று மாநதி பரந்துவரு கழனியிற்
களையெனக் குவளை களைவார்
கண்டுவெரு வித்தங்கள் கைநெரித் தருகுமிடை
கன்னலங் காடு மறையச்
சேலொன்று விளையாடு சீர்காழி நாடாளி
செங்கீரை யாடி யருளே
செழுநான் மறைத்தலைவ திருஞான சம்பந்த
செங்கீரை யாடி யருளே.

# திருப்புகழ்

ஊனத்தசை தோல்கள் சுமந்த
காயப்பொதி மாய மிகுத்த
ஊசற்சுடு நாறுகு ரம்பை மறைநாலும்
ஓதப்படு நாலு முகன்ற
னூலுற்றிடு கோல மெழுந்து
ஓடித்தடு மாறி யுழன்று தளர்வாகிக்
கூனித்தடி யோடு நடந்து
ஈனப்படு கோழை மிகுந்த
கூளச்சட மீதை யுகந்து புவிமீதே
கூசப்பிர மாணப்ர பஞ்ச
மாயக்கொடு நோய்க ளகன்று
கோலக்கழ லேபெற இன்று அருள்வாயே
சேனைக்குரு கூடலி லன்று
ஞானத்தமிழ் நூல்கள் பகர்ந்து
சேனைச்சம ணோர்கழு வின்கண் மிசையேறத்
தீரத்திரு நீறு புரிந்து
மீனக்கொடி யோனுடல் துன்று
தீமைப்பிணி தீர வுவந்த குருநாதா
கானச்சிறு மானை நினைந்து
ஏனற்புன மீது நடந்து
காதற்கிளி யோடு மொழிந்து சிலைவேடர்
காணக்கணி யாக வளர்ந்து
ஞானக்குற மானை மணந்து
காழிப்பதி மேவி யுகந்த பெருமாளே.

—அருணகிரிநாதர்.



ஸ்ரீலஸ்ரீ சிவஞானதேசிக சுவாமிகள் அருளிச்செய்த

# ஆபதுத்தாரணர் மாலே

## காப்பு

விண்ணூர் மலர்ப்பொழில் சூழ்காழி மாமலே மேலமர்ந்த
தண்ணூர் மதிபுனே வேணிய ஞபதுத் தாரணன்மேல்
பண்ணுரப் பாடிய மாலேக்கு மாமுகன் பாதமும்நீள்
கண்ணு றிரண்டுள கந்தன்பொற் பாதமுங் காத்திடுமே.

## நூல்

சீர்கொண்ட செம்பொற் றிருமேனி யும்செம் முகமலருங்
கார்கொண்டசட்டையுந் தண்டாயுதமுங் கணங்களெட்டுங்
கூர்கொண்ட மூவிலேச் சூலமுங் கொண்டருள் கூர்ந்த கொன்றைத்
தார்கொண்ட வேணிய னேகாழி யாபதுத் தாரணனே. 1

தெள்ளும் புழுகும் பனிநீருங் குங்குமச் சேறுஞ்செந்தேன்
விள்ளும் மலருநின் பாதத்திற் சாத்தி விடாமலின்பங்
கொள்ளும் படியன்பு தந்தெனே யாண்டருள் கூற்றுவனேத்
தள்ளும் பதாம்புய னேகாழி யாபதுத் தாரணனே. 2

சாயாத சூலதண் டாயுத னேபச்சைச் சட்டையனே
வேயார்விண்ணேர்தொழுமேனியனே யென்மிடி தவிர்ப்பாய்
வாயார வுன்னேத் துதிப்போர்க்கு வேண்டும் வரமளிப்பாய்
தாயா கியவப்ப னேகாழி யாபதுத் தாரணனே. 3

வட்டையொப்ப பாகு மினியசொல் மாதர் மயக்கத்திலே
பட்டேயப் பாமிக யானிளேத் தேன்பண் டிருவர்க்கெட்டா
நெட்டையப் பாமறை காணுத சேவடி நீயருள்வாய்
சட்டையப் பாவடு காகாழி யாபதுத் தாரணனே. 4

மட்டுப் படாத யதூதர் வந்து வளைத்துடலைச்
சுட்டுப் பலபொாக்குமுன் காத்தருட் டோடணிந்த
பட்டுப் புயத்தினுந் தண்டா யுதத்தினும் பாதத்தினுந்
தட்டுப் புழுகணிங்காழி யாபதுத் தாரணனே. 5

நெறியும் பொறியுந் தவமுமெய்ஞ் ஞானமும் நீடறிவும்
பொறியும் புகழுங்கொடுத்தருள் வாய்புரங் காய்ந்தவனே
குறியுங் குணமுங் டந்தவ னேகுழக் கன்றுகட்டுந்
தறியின்கண் வந்தனேகாழி யாபதுத் தாரணனே. 6

அடியார் மனத்தி னைத்த கரும மனைத்துமங்கே
முடியாத தேது முத்தருள் வாய்முரு காரலங்கல்
கடியார் மலர்க்கொன்றை மாலிகை சூடிய கண்ணுதலே
தடியேந் தியகையனேகாழி யாபதுத் தாரணனே. 7

முட்டற வாழும் பெருஞ்செல்வ மும்முத் தமிழ்க்கல்வியும்
எட்டுணை யேனுங்கொடுத்துண் டிருக்க வெனக்கருள்வாய்
வட்ட மதிச்சடை யானே சிகர மலைக்கமர்ந்த
சட்ட முடையவ னேகாழி யாபதுத் தாரணனே. 8

பொய்யா கியபுவி வாழ்க்கைக் கடலிற் புகுந்தழுந்தி
மெய்யா மிதுவெனநம்பிவிட டேன்வினை யேனைக்கண்பார்
மையாடு கண்ணியர் பின்செலத் தாரு வனத்திற்சென்ற
சைவா கமப்பொருளேகாழி யாபதுத் தாரணனே. 9

நீலக் கயல்விழி மாதர் கலவியில் நேசம்வைத்தே
ஆலைக் கரும்பது போல விடாதுன் னருள்புரிவாய்
வாலைக் கலைமதி வேணிய னேவடு காவடியார்
சாலத் தொழுமைய னேகாழி யாபதுத் தாரணனே. 10

செந்தமி ழோர்தொழுந் தண்டா யுதமுந் திருவழகுங்
கந்தர மும்பச்சைக் கஞ்சுகந் தானுங் கருதரிய
இந்தணி வட்டச் சண்டிழுங்கண் மூன்று மிருபதமுஞ்
சந்தத மும்மற வேன்காழி யாபதுத் தாரணனே. 11

படிக்குந்தண் டாயுதமென்பார்க்கு நோய்வினை பற்றுப்பப்
பிடிக்குந்தண் டாயுத வெண்ணருங் கோடிப்ர மண்ட மெல்லாம்
முடிக்குந்தண் டாயுதமூதண்டந் தாண்டு முகுந்தசென்னி
தடிக்குந்தண் டாயுத னேகாழி யாபதுத் தாரணனே. 12

அரம்பிடிக்குங்கண்ணிஞராசைமேற்கொண்டவைதெல்லாம்
வரம்பிடிக் குங்கருத் துண்மைகண் டார்க்கில்லைவந்தருள்கூர்
உரம்பிடிக் குந்துட்ட வேதாள பூதத்தை யோட்டிவெட்டித்
தரம்பிடிக் கும்வடு காகாழி யாபதுத் தாரணனே 13

பெருகா ரணியத்தில் யான்சென்ற போதும் பெம்பொருளால்
வருகாதல் கொண்டிர விற்றுயில் போதுமிம் மண்டலத்தில்
துருவா தியர்கள் சபையிற்செல் போதுந் துணையெனக்கு
வருவா யுனைநம்பி னேன்காழி யாபதுத் தாரணனே. 14

செம்மலை மீதினிற் சாமள கஞ்சுகஞ் சேர்வடிவும்
அம்மலைபோலுநற் றண்டா யுதமுங்கொண் டண்டனே
எம்மலை வேதந் தவிர்த்தருள் வாய்கடு வேந்திவினைஞோர்
தம்மலை வோட்டுந் தமிழ்க்காழி யாபதுத் தாரணனே. 15

மாடுந்தண் டாம மணிந்திடு மைந்தரு மாதர்களு
வீடுந்தண் டாம மெனமகி ழாமலுன் மென்மலர்த்தாள்
பாடுந்தண் டாத்தமி ழீந்தருள் பூத பசாசுகளைச்
சாடுந்தண் டாயுத னேகாழி யாபதுத் தாரணனே 16

வெடிக்கும் பரவை முரசதிர் காமனை வீறழியப்
பொடிக்குங்கனல்விழிப்புண்ணியனேபுவியோர்நெஞ்சந்
துடிக்கும் பொல்லாத பிசாசுக டன்னைத் துரத்திவெட்டி
அடிக்குந் தண்டாயுத னேகாழி யாபதுத் தாரணனே. 17

இலையென்றொருவர்க் கிதஞ்சொல்லபி யென்று மிரங்கிநில்லா
நிலையென்று நீயளித் தாண்டருள் வாய்நித்த னேபுகலி
மலையொன் றியவடு கேசகங் காள வயிரவனே
தலையொன் றியகைய னேகாழி யாபதுத் தாரணனே. 18

பாடிக்கொண் டாடிப் பணிந்திடு மன்பர்தம் பாதமலர்
கூடிக்கொண் டாடித் திரிந்திட வேயெனைத் தொண்டுகொள்வாய்
தேடிக்கொண் டாடி வருவோர்கள் வல்வினைச் சிக்கையெல்லாஞ்
சாடிக்கொண் டாடிய வாகாழி யாபதுத் தாரணனே. 19

தெவ்விடத் தாய திசைபிழைத் தாலுஞ் சினவரவங்
கவ்விடத் தான்வெய்ய கானடந் தாலுங் கருதரிய
எவ்விடத் தேச மிருந்தாலு மென்ற னிடரையெல்லாந்
தவ்விட நீவரு வாய்காழி யாபதுத் தாரணனே. 20

நீடுந்தண் டாயுத நித்தந்தண் டாயுத நித்தமன்பர்
தேடுந்தண் டாயுதம் ஈரே ழுலகமுஞ் சேவித்துக்கொண்
டாடுந்தண் டாயுதம் அண்டாது பேய்க ளலறிவிழச்
சாடுந்தண் டாயுத னேகாழி யாபதுத் தாரணனே. 21

வங்கங் கலிங்கங் குலுங்கந் தெலுங்க மராடமுதல்
எங்கெங்கும் போக இடர்வரும் போது மினிமையுடன்
அங்கங்கு நீதுணை யாய்வரு வாய்திங்கள் வான்மதியந்
தங்குஞ் சடாடவி யாய்காழி யாபதுத் தாரணனே. 22

ஈனந் தருமிதென் றெண்ணு மலையிடும் பான்மெலிந்திங்
கூனந் தருமிந்தச் செல்வருக் கிச்சை யுரையுரைத்தேன்
வானந் தருமும் பருக்கா யவுணரை மாட்டிநல்ல
தானந் தருமண்ண லேகாழி யாபதுத் தாரணனே. 23

அடிக்குட் பணியுநின் னன்பரைக் காயு மவருடலை
வெடித்துப் பொடிபட நீவிழிப்பா யெட்டுவெற்புஞ் செற்றே
இடித்துப் பொடிபட வல்லா யுதம்பதி னெட்டு முன்கைத்
தடிக்குப் பெரியதுண் டோகாழி யாபதுத் தாரணனே. 24

உளப்பரி வில்லவர் தம்மில்லிற் சென்றங் குரையுரைத்துக்
கொளப்பரி வான மொழிபல கூறிக் குறைகள் சொல்வீர்
இளைப்பறக் காப்பவன் யாவனென் றுலர விந்தமெல்லாந்
தளப்பருஞ் செல்வி வளர்காழி யாபதுத் தாரணனே. 25

கலையாரு முத்தமிழ்க் கல்வியும் யோகமும் காசினியில்
நிலையா கியபெருஞ் செல்வமும் நீதியு நீயருள்வாய்
மலையா சனவடு கேசகங் காள வயிரவனே
தலைமாலை சூழ்புய னேகாழி யாபதுத் தாரணனே. 26

வாட்கொண்ட கண்ணியர் மாயையில் வீழ்ந்து மருண்டுபல
நாட்கொண்ட தீயனையாட்கொண்டு காத்தருள் நல்குவையோ
கோட்கொண்ட காலனுக் கஞ்சிய பாலனைக் கூர்ந்தளித்துத்
தாட்கொண்டு காத்தவ னேகாழி யாபதுத் தாரணனே. 27

நிட்டைக்குள் வாழவு நின்னடி போற்றவு நேர்ந்தறியா
வொட்டைச் சடலத்தை யானெடுத் தேனொளி யோங்குசெம்பொற்
பட்டைப் புனைந்த புயமீது மாயன் படிவந்தந்த
சட்டைக் கிடந்தந் தருள்காழி யாபதுத் தாரணனே. 28

சொல்லா கியபொரு ளெல்லா முணர்ந்துனைத் தோத்தரிக்க
வல்லார் தமைத்தொழ வல்லா னெனவென்னை வைப்பதுண்டோ
கல்லாற் சிலைதொட்ட நல்லாரெல் லார்க்குங் கதியளிக்குஞ்
சல்லாப மானவ னேகாழி யாபதுத் தாரணனே. 29

இந்திரன் வாழ்க்கையு நான்முகன் வாழ்க்கையு மீர்ந்துளவோன்
நந்தமில் வாழ்க்கையும் பெற்றாலு நின்னடி யார்களுக்குப்
புந்திசெய் வாழ்க்கையை யொவ்வாது கானொளி பூண்டஇளஞ்
சந்திர சேகர னேகாழி யாபதுத் தாரணனே. 30

உ

சிவமயம்

## ஸ்ரீ பைரவர்

# அஷ்டோத்தர சதநாமங்கள்

ஓம் ஆனந்த பைரவாய நம:
ஓம் அஸிதாங்க பைரவாய நம:
ஓம் ருரு பைரவாய நம:
ஓம் சண்ட பைரவாய நம:
ஓம் க்ரோத பைரவாய நம:
ஓம் உன்மத்த பைரவாய நம:
ஓம் கபால பைரவாய நம:
ஓம் பீஷண பைரவாய நம:
ஓம் ஸம்ஹார பைரவாய நம:
ஓம் ஆனந்தாய நம:
ஓம் தீர்க்க பிங்களாய நம:
ஓம் ஜடாதராய நம:
ஓம் பிக்ஷா ஹராய நம:
ஓம் நரஹராய நம:
ஓம் பீதவர்ணை நம:
ஓம் பீமருபாய நம:
ஓம் பிஞைகப்ருதே நம:
ஓம் உத்தண்ட பைரவாய நம:
ஓம் உக்ராய நம:
ஓம் விச்வ ரக்ஷஸே நம:
ஓம் புருஷாய நம:
ஓம் வடுகாய நம:

ஓம் வனவாஸாய நம:
ஓம் வரதாய நம:
ஓம் ஸந்துஷ்டாய நம:
ஓம் க்ஷேத்ரபாலகாய நம:
ஓம் ஸ்வர்ணரூபாய நம:
ஓம் ஸுராத்யக்ஷாய நம:
ஓம் ஸுராய நம:
ஓம் ஸ்வர்ண பூஷணாய நம:
ஓம் மஹா பைரவாய நம:
ஓம் கலா நாதாய நம:
ஓம் காலாந்தகாய நம:
ஓம் கங்காளதராய நம:
ஓம் கால பைரவாய நம:
ஓம் கல்பாந்த பைரவாய நம:
ஓம் கபால மாலாதராய நம:
ஓம் கபாலினே நம:
ஓம் கலி தோஷஹராய நம:
ஓம் சூலினே நம:
ஓம் தன்யாய நம:
ஓம் தயா நிதயே நம:
ஓம் தண்டபாணயே நம:
ஓம் கல்யாய நம:
ஓம் தானவாரயே நம;
ஓம் திகம்பராய நம:
ஓம் திவ்ய மூர்த்தயே நம:
ஓம் திவ்யாய நம:
ஓம் துஷ்டநிக்ரஹாய நம:
ஓம் ஸவித்ரே நம:
ஓம் விஜயாய நம:
ஓம் விமலாய நம:
ஓம் வீராய நம:
ஓம் சூராய நம:

ஓம் ச்லவாஹனுய நம :
ஓம் மார்த்தாண்ட பைரவாய நம :
ஓம் மான்யாய நம :
ஓம் மானதாய நம :
ஓம் மன்மத நாசனுய நம :
ஓம் தீர்த்த ப்ரதாய நம :
ஓம் தீர்த்தகராய நம :
ஓம் தீர்த்த வாஸாய நம :
ஓம் அபய ப்ரதாய நம :
ஓம் பகவதே நம :
ஓம் கண்டபரசவே நம :
ஓம் ஸர்ப்ப பூஷாய நம :
ஓம் அலங்க்ருதாய நம :
ஓம் அமாயாய நம :
ஓம் ஆதித்ய ரூபாய நம :
ஓம் ஆதாம்ராய நம :
ஓம் அநுபூஜ்யாய நம :
ஓம் பராக்ரமாய நம :
ஓம் ஸர்வார்த்தி ஹராய நம :
ஓம் த்ரிநேத்ராய நம :
ஓம் ஸர்வேசாய நம :
ஓம் மதமாலாய நம :
ஓம் மாஷாபூபப்ரியாய நம :
ஓம் மஹாக்ஷேத்ராய நம :
ஓம் லோக ரக்ஷகாய நம :
ஓம் லோகேச்வராய நம :
ஓம் மஹாபூத பயங்கராய நம :
ஓம் மஹா மான்யாய நம :
ஓம் ரக்த ரூபாய நம :
ஓம் ஜ்வாலாகேசாய நம :
ஓம் சசிதராய நம :
ஓம் ரக்தாங்காய நம :

ஓம் தேஜோமயாய நம :
ஓம் சூலஹஸ்தாய நம :
ஓம் கபால மாலா பரணாய நம :
ஓம் பாசஹஸ்தாய நம :
ஓம் டமருக தராய நம ;
ஓம் த்ரி லோசனாய நம :
ஓம் கோலாஹல ப்ரியாய நம :
ஓம் பிசாச நாதாய நம :
ஓம் பால ரூபாய நம :
ஓம் பூத ரூபாய நம :
ஓம் நாக யக்ஞோபவீதாய நம :
ஓம் அபீஷ்டஸித்தி ப்ரதாய நம :
ஓம் அங்குச தராய நம :
ஓம் த்ரிசூலதராய நம :
ஓம் அஷ்ட புஜாய நம :
ஓம் தம்ஷ்ட்ரா தந்தாய நம :
ஓம் ஆக்ஞா சக்ராய நம :
ஓம் ஆகாச பைரவாய நம :
ஓம் ஜ்யோதீ ரூபாய நம :
ஓம் வ்யோமரூபாய நம :
ஓம் தனாகமாய நம :
ஓம் ஸ்ரீ கால பைரவராய நம :

## —: தருமபுர ஆதீன வெளியீடுகள் :—

| எண் | புத்தகம் | விலை ரூ. அ. பை. | தபாற்செலவு ரூ. அ. பை. |
|---|---|---|---|
| 1. | திருஞானசம்பந்தர் தேவாரம் முதல் திருமுறை (ராப்பர்) | 3—8—0 | 1—5—0 |
| 2. | இரண்டாந்திருமுறை (காலிகோ) | 5—0—0 | 1—8—0 |
| 3. | சமயபோதச்சொற்பொழிவுகள் | 1—0—0 | 0-13—0 |
| 4. | பரமாணு புராணம் | 1—4—0 | 0—9—0 |
| 5. | நித்தியபூஜா லக்ஷண சங்கிரகம் | 1—8—0 | 0—9—0 |
| 6. | திருக்குறள் உரைவளம் பொருட்பால் (காலிகோ) | 13—8—0 | 2—4—0 |
| 7. | காமத்துப்பால் ,, | 6—0—0 | 1—8—0 |
| 8. | திருவாசகம் ,, | 2—0—0 | 0-14—0 |
| 9. | நால்வர் நான்மணிமாலை | 0—4—0 | 0—4—0 |

தொகையை முன்பே அனுப்பிப் பெறல்வேண்டும்.

கிடைக்குமிடங்கள் :-

1. மானேஜர்,
   தருமபுர ஆதீனம், தருமபுரம், மாயூரம் போஸ்ட்.
2. தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப் பிரசாரநிலயம்,
   41, உஸ்மான் ரோடு, தியாகராயநகர், சென்னை-17.

ஆதீன இசைப்புலவர், இசையரசு

திரு. **M. M.** தண்டபாணிதேசிகர் அவர்கள் பாடிய,

**பாராயணத் திருமுறைப் பாடல்கள்**

| | | |
|---|---|---|
| செட் ஒன்றுக்கு விலை | ரூ. | 40—10—0 |
| தபால், பாக்கிங் செலவு | ரூ. | 6— 8—0 |

கிடைக்குமிடங்கள் :-

1. காஷியர், ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானம்,
   சீகாழி, தஞ்சாவூர் ஜில்லா.
2. தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப் பிரசாரநிலயம்,
   41, உஸ்மான் ரோடு, தியாகராயநகர், சென்னை-17.